


# தினப்புயல்

PIN news

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06




மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் -349




# தமிழ் தேசிய கூட்டமைப்பின் இராஜதந்திர நகர்வுகள்


## சீனா, இந்தியா, அமெரிக்கா நாட்டு புலனாய்வாளர்களும் இலங்கை அரசின் இன்றைய நிலையும்

## முஸ்லிம்ங்களின் தயார்ப்படுத்தலில் மற்றுமொரு குண்டுத்தாக்குதல் நடத்தப்படலாம்

-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-

# இராணுவ சித்தாந்தம் கொண்ட ஜனாதிபதியால் தமிழர்களுக்கு தீர்வு கிடைக்க போவதில்லை - மாவை

## தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவுடனான நேர்காணல்



**கேள்வி : இன்றைய அரசியல் சூழ்நிலையிலே கொரோனா வைரஸின் தாக்கம் ஒருபுறமிருக்க மறுபுறத்தில் இலங்கையில் இதனூடாக பல அரசியல் நடவடிக்கைகள் போன்ற விடயங்கள் நடை பெற்றுக்கொண்டிருக்கின்றன. அந்தவகையில் பார்க்கின்ற பொழுது முதலாவது விடயமாக இலங்கை கடற்பரப்பிலே ஒரு எண்ணெய் கப்பல் எரிந்த சம்பவம் நீங்கள் அறிந்திருப்பீர்கள் அதனூடாக பல அரசியல் நடவடிக்கைகள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. இது தொடர்பாக உங்களுடைய நிலைப்பாடு என்ன?**

**பதில் :** இலங்கை கடற்பரப்பிலே கொழும்பை அண்மித்த பிரதேசத்தை அந்த கப்பல் வந்தடைந்த பொழுது தீப்பற்றி எரிந்த பொழுது இரசாயன தொகுதிகள் அதில் இருந்தன எனவும் செய்திகள் வந்தது. அவ்வாறு அந்த கப்பல் தீப்பற்றி எரிந்ததன் விளைவாக கடற்பரப்பு மட்டுமல்ல அந்த கடற்பரப்பிலே வாழ்கின்ற மக்களுக்கு பெரும் செல்வத்தை கொடுக்கின்ற மீன் இனமே அழிகின்றது என்றும் அந்த கடற்தொழிலை செய்கின்ற மீனவ மக்களும் பிற மக்களும் அதனால் உயிராபத்தை எதிர்கொள்ளவேண்டி நிற்கின்றார்கள் என்ற செய்திகளும் வந்துகொண்டிருக்கின்ற வேளையில் நாங்கள் அறிந்த விடயங்களை பார்த்தால் இந்தியா, சிங்கப்பூர் போன்ற நாடுகள் அந்த கப்பலை தங்களது நாடுகளுக்கு வர அனுமதி கொடுக்கவில்லை என எங்களுக்கு செய்திக் கிடைக்கின்றன.

ஆகவே முதலாவதாக இலங்கை எப்படி கொழும்பு துறைமுகத்திற்கு வருவதற்கு அந்த கப்பலிற்கு அனுமதியளித்தது என்பதற்கான பதிலை கூற வேண்டும். அதற்கான பதில் இன்றுவரை கூறப்படவில்லை. இரண்டாவதாக அந்த கப்பல் எரிந்து கொண்டிருந்த கால அவகாசத்தை பார்த்தால் அதை எரிந்து கொண்டிருந்த வேளையில் ஏன் வேறு இடத்திற்கு நகர்த்தமுடியவில்லை. எரிந்து கொண்டிருந்ததை ஏன் நோக்கமுடியவில்லை. அல்லது அங்கிருந்த இரசாயன பதார்த்தங்களை, இரசாயன பொருட்களை ஏன் அகற்றமுடியவில்லை என்ற கேள்விகள் எல்லாம் எங்களுக்கு அப்பாற்பட்ட கேள்விகளாகவே இருக்கின்றன. தற்பொழுது அதையொட்டி கொரோனா வைரஸ் காலத்திலே இன்னுமொரு உயிராபத்தை இந்த மக்களுக்கும் உயிரினங்களுக்கும் மற்றும் ஏனைய நாடுகளுக்கும் ஏற்படுத்தக்கூடிய சூழ்நிலைக்கு இந்த கப்பல் கொழும்பு துறைமுகத்திற்கு வரவழைக்கப்பட்டு கொழும்பை அண்டிய கடற்பரப்பில் எல்லாம் ஆபத்தை நாங்கள் எதிர்நோக்கி நிற்கின்ற நிலையில் அதற்கு பொறுபற்ற பதில்கள் அரசாங்கத்திடமிருந்து வருகின்றன. அதையொட்டி தற்பொழுது அதற்கு பொறுப்பான அமைச்சர் மீது அவர்களுடைய ஆட்சியுடன் சம்பந்தப்பட்ட ஒரு அரசியலமைப்பு நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டுவந்திருக்கிறார். நம்பிக்கையில்லா பிரேரணை நிறைவேற்றப்படுவதோ அல்லது நிறைவேற்றமுடியாமல் போவதோ என்பதல்ல பதில். பதில் மிகப் பாரதூரமானது. நடவடிக்கைகள் பாரதூரமானது அதனால் அரசே முழுப்பொறுப்பையும் ஏற்க வேண்டும்.

ஆகவே தனியொரு அமைச்சரை மட்டும் சுட்டிக்காட்டி ஒரு நம்பிக்கையில்லா பிரேரணையை கொண்டு வருவது முடிந்த செயற்பாடாக இருந்தாலும் அதைவிட இந்த அரசும் அதற்கு பொறுப்பு சொல்லவேண்டிய தேவை இருக்கின்றது. அதை தான் நாங்கள் வற்புறுத்திக்கொள்கின்றோம். அதாவது கடந்த 22 ஆம் திகதி ஜனாதிபதி சபாநாயகர் இடத்தில் அந்த நம்பிக்கையில்லா பிரேரணையை கொடுக்கப்பட்டிருப்பதாக அறிகின்றோம். அந்த நிலைமையில் த.தே.கூ எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்று நாங்கள் கூடி ஆராய்ந்து தான் அதற்கான பதிலை கூறுவோம். முழு அரசாங்கமும் பொறுப்பு கூற வேண்டும் என்பது தான் எங்களுடைய அடிப்படை கருத்தாக இருக்கின்றது. தனியே ஒருவர் மட்டுமல்ல அதற்கு அனுமதி வழங்கிய நிபுணத்துவம் வாய்ந்தவர்களா அல்லது அரச தரப்பினர்களா என்பதையெல்லாம் ஆராய்ந்து பார்த்தால் பொறுப்பற்ற பதில்கள் தான் வருகின்றது. ஆனால் அரசு தான் முழு பொறுப்பு என்பது எங்களுடைய கருத்து. ஆகவே அந்த விடயத்தை த.தே.கூட்டமைப்பு குறிப்பாக பாராளுமன்ற உறுப்பினர்கள் நாங்கள் அனைவரும் கூடி அதற்கான சரியான பதிலை. நம்பிக்கையில்லா பிரேரணை வந்தால் நாங்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பது பற்றி தீர்மானம் எடுக்க வேண்டும்.

**கேள்வி : அதுபோன்று நீங்கள் நேற்றைய தினம் இந்திய தூதுவரை சந்தித்திருந்தீர்கள் அந்த சந்திப்பு எப்படியிருந்தது?**

**பதில் :** இலங்கை அரசாங்கத்தினுடைய ஜனாதிபதியாக இருக்கின்ற கோட்டபாய ராஜபக்ச அவர்கள் தன்னுடைய பதவியேற்பு நிகழ்விலும், பாராளுமன்றத்தில் அவர் உரையாற்றிய பொழுதும் அறிவித்த ஒரு முக்கியமான விடயம் புதிய அரசியலமைப்பை தான் கொண்டுவரப்போவதாக அறிவித்தார். அதற்கு அவர் அடித்தளமிட்ட பகுதியாக அவர் கூறிய விடயம் என்னவென்றால் தனக்கு இரண்டு விடயங்கள் முக்கியமாக பகிரப்படவேண்டி இருக்கின்றன. அதில் ஒன்று ஜனாதிபதி தேர்தல்கள் வந்த காலங்களில் போட்டிகள் இருந்த பொழுது ஜனாதிபதி வேட்பாளர்கள் நிறைவேற்று அதிகார முறையை நீக்க வேண்டும் என்று தான் அனைவரும் பேசிவந்திருக்கிறார்கள்.

ஆனால் கோட்டபாய ராஜபக்ச அவர்கள் தான் போட்டியிடும் பொழுது தன்னுடைய கொள்கை அறிக்கையில் வெளியிட்ட விடயம் என்னவென்றால் நிறைவேற்று அதிகாரமுறை பலமாக தனக்கு இருக்க வேண்டும் என்று தான் அவர் வேண்டுகோள் விடுத்தார். அதற்கு மக்கள் அங்கீகரித்திருக்கின்றார்கள் என்று தான் அவர் தனக்கு மக்களினுடைய பெரும்பலம் தரப்பட்டிருக்கின்றது என்றால் வருகின்ற புதிய அரசியலமைப்பில் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறை மிகப்பலமாக வீசப்போகின்றது என்பது தான் அவருடைய கருத்து. எதிர்காலத்தில் அதை நிறைவேற்றி கைப்பற்றுவேன் என்று கூறியும் வெற்றிபெற்றுவிட்டார். அரசியலமைப்பும் அதை நிறைவேற்றும் என்றும் நாம் எதிர்பார்க்கின்றோம். அதற்கு அடுத்ததாக ஜனநாயக நடைமுறைகளை எடுத்துப்பார்த்தால் 20 ஆம் திருத்தம் பல ஜனநாயக ரீதியான முன்னேற்றங்களை கொண்டு நிறைவேற்றப்பட்டுள்ளது. தற்பொழுது 19 ஆம் திருத்தத்தை மாற்றி 20 ஆம் திருத்தத்தை கொண்டு வந்ததன் மூலமாக அந்த விதிமுறைகளை மாற்றி இராணுவத்திற்கு அதிகாரத்தை வழங்குகின்ற இராணுவ தளபதிநிர்வாகங்களில் ஓய்வுபெற்றவர்களுக்கு நிர்வாக தலைமைத்துவத்தை வழங்குகின்ற அளவிற்கு குறிப்பாக இந்த அரசு பற்றி குறிப்பிட வேண்டுமானால் ஜனாதிபதி குறிப்பிட்டது என்னவென்றால் பௌத்த சிங்கள மக்கள் தன்னை பெரும்பான்மைப்பலத்துடன் தெரிவு செய்திருக்கின்றார்கள். அந்த அடிப்படையை நிறைவேற்றுவதற்கு அந்த அடிப்படைவாதத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு அரசியலமைப்பை நிறைவேற்றப்போகின்றார் என்பது தான் அவர் குறிப்பிட்ட விடயம்.

அதே நேரம் மறுபுறத்தில் இந்த நாட்டில் இத்தனை ஆண்டு காலமாக ஒரு இனப்பிரச்சனை இருக்கின்றது இலட்சக்கணக்கான மக்கள் அந்த இனப்பிரச்சனை தீர்க்கப்படாத நாட்டிலே கொல்லப்பட்டிருக்கின்றார்கள். போர் நடைபெற்றிருக்கின்றது. இந்த நாட்டினுடைய மக்களிற்கு ஒரு இனப்பிரச்சனைக்கான தீர்வு இல்லை என்பது பற்றி அதற்கு தான் எவ்வாறு நடக்கப்போகின்றேன் என்பது பற்றியும் இந்த அரசியலமைப்பில் அதற்கு இடமிருக்கிறதா என்பது பற்றியும் அவர் உச்சரிக்கவே இல்லை. அந்த நிலைமையை ஜனாதிபதி அவர்கள் ஒரு அரசியலமைப்பை உருவாக்குவதற்கு 9 பேர் கொண்ட நிபுணத்துவமுடைய ஒரு குழுவை நியமித்திருந்தார். அந்த குழு முன் அரசியலமைப்பு சம்பந்தமாக அனைத்து கட்சிகளிடமும் ஆலோசணை வழங்குமாறு கூறியிருந்தார். அந்த சமயத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பும் இந்த நாட்டினுடைய அரசியலமைப்பு எவ்வாறு இருக்க வேண்டும். இனப்பிரச்சனைக்கான தீர்வு என்ன என்பது பற்றியெல்லாம் தெளிவாக எடுத்துரைத்திருக்கின்றது. ஆனால் எங்களுடைய த.தே.கூட்டமைப்பின் கருத்துக்களையும் எழுத்து மூலமாகவும் நாங்கள் முன்வைத்ததன் பின்னர் அதைப்பற்றிய பேச்சு எதுவுமே நாட்டில் நடைபெற்றுக்கொண்டிருக்கவில்லை. ஜனாதிபதி அதற்கு பதில் சொல்லவில்லை. அந்த குழுவிலிருந்தவர்கள் ஜனாதிபதிக்கு த.தே.கூட்டமைப்பினுடைய சமர்ப்பணங்களுக்கு பின்னர் அவர்களுக்கு முன்னாள் பேச்சுவார்த்தைகள் வந்த பின்னர் நாங்கள் அறிந்தோம் ஜனாதிபதிக்கு த.தே கூட்டமைப்பின் சமர்ப்பணங்களுக்கு பின்னர் அந்த பிரச்சனை பற்றியும் இந்த நாட்டினுடைய இனப்பிரச்சனை பற்றியும் அக்கறை செலுத்தாமல் ஒரு அரசியலமைப்பை உருவாக்குவது என்பது பொருத்தமற்றது என்ற வகையிலும் கூட அவர்கள் கலந்து பேசி எங்களுக்கு ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டது.

அந்த நிலைமையில் தான் எங்களுடைய தலைவர் திரு.சம்பந்தன் அவர்கள் ஜனாதிபதிக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார் அரசியலமைப்பை உருவாக்குவதற்கு. அதற்கு என்ன நடந்தது என்றால் அந்த விடயம் பற்றி நாங்கள் பேச வேண்டும் என்று கேட்டிருக்க அவர் எங்களுக்கு 16 ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு நான் உங்களை சந்திக்கலாம் என்று அவர் அறிவிப்பை தந்தார். 15 ஆம் திகதி பிற்பகல் அந்த நிகழ்ச்சி ஒத்திவைக்கப்படுகின்றது என்று பதில் கிடைத்திருக்கிறது. ஏன் அவர்கள் கதைத்துவிட்டு சந்திக்கவில்லை என்று தெரியவில்லை. அந்த சந்தர்ப்பத்தில் நாங்கள் இந்திய தூதுவரோடும் அங்கு கட்சியின் தலைவராகவும் இருந்தபடியால் அவரையும் சந்திக்க வேண்டும் என்ற சந்தர்ப்பம் உருவாகியதால் இந்திய தூதுவரையும் சந்தித்திருக்கின்றோம். அவர்களிடம் நாங்கள் குறிப்பாக ஆராய்ந்த விடயம் அதற்கு முன்னர் குறிப்பாக வடக்குக்கு எல்லாம் பயணம் செய்த தூதுவர் அதற்கு முன்னரும் அதற்கு பின்னரும் சந்தித்த சந்தர்ப்பத்திலும் வடக்கு கிழக்கு போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசம். அந்த பிரதேசத்தையும் மக்களுடைய பொருளாதாரத்தையும் கட்டியெழுப்ப அபிவிருத்தி செய்வதற்கு இந்தியா முடிவெடுத்திருக்கின்றோம். அந்த அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் என்று தான் சொல்லியிருந்தோம். அதற்கு முன்னர் வீட்டுத்திட்டம் போன்ற பல்கலைக்கழகம் போன்ற பல துறைகளிலும் இந்தியா பக்கபலமாக இருந்து உதவியிருக்கின்றது என்பதை பார்க்கின்ற பொழுதிலும் எங்களுக்கு நம்பிக்கை இருந்தது. அந்த நம்பிக்கையின்படி இந்திய அரசாங்கம் கூறியதற்கு பின்னர் கொரோனா வைரஸ் உலகம் முழுவதும் பரவி தீவிரம் அடைந்திருக்கின்ற நிலையில் இந்திய அரசு எங்களுக்கு அறிவித்த அல்லது தூதுவர் குறிப்பிட்ட விடயத்தை நிறைவேற்ற முடியாத சூழல் ஏற்பட்டிருக்கின்றதைப் பற்றி எங்களுக்கு மனவருத்தத்துடன் பதில் தந்திருந்தார்.

ஆனாலும் நாங்கள் இந்த கொரோனா வைரஸ் காலத்திலும் அவர் அதனை நோய் முடிவடைந்த சந்தர்ப்பத்தின் பின்னரும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் நாங்கள் இன்னும் திட்டவட்டமாக இருக்கின்றோம். வடக்கு கிழக்கில் பல பிரதேசங்களில் கொரோனாவால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் மத்தியில் அபிவிருத்திக்கான நடவடிக்கைகளை எடுப்போம் என்ற விடயங்களைத் தான் அதிக நேரமாக எவ்வாறு நாங்கள் செயற்படலாம் எவ்வாறானவற்றை நிறைவேற்றலாம் என்பது பற்றிய பேச்சுக்களை ஆராய்ந்திருக்கின்றோம். அடுத்து அவர் குறிப்பிட்ட கருத்தில் தற்பொழுது தமிழ் மக்கள் கையிலே அதிகாரம் இல்லாமல் இருக்கின்றது. மாகாண சபைகளும் இந்திய இலங்கை உடன்பாட்டின்படி மாகாணசபை திட்டம் ஒன்று அறிவிக்கப்பட்டு தேர்தலில் அந்த சபைகள் இயங்கினாலும் அவைகளுக்கு போதியளவு அதிகாரம் இல்லாமலிருந்தாலும் அவ்வாறான ஒரு சபை இருந்தாலும்கூட தாங்கள் முன்னெடுத்திருக்கின்ற அபிவிருத்தி நடவடிக்கைகளைக்கூட முன்னெடுப்பதற்கு ஒரு சந்தர்ப்பமாக இருந்திருக்கும். அதுவும் இல்லாமலிருக்கின்றது. அப்படி மாகாண சபைகளேனும் நாங்கள் இந்த அபிவிருத்தி நடவடிக்கைகளை எடுக்கும் சந்தர்ப்பங்களையும் நாங்கள் உருவாக்க வேண்டும் என்ற கருத்தையும் அவர் முன்வைத்திருக்கின்றார். இந்த விடயங்களை பற்றி தான் நாங்கள் பேசியிருந்தோம்.

**நேர்காணல் : இரணியன்**

தினப்புயல்
ஆசிரியரபீடம்
இல:154 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை, வவுனியா.

## கொரோனா வைரசும் இலங்கையின் பொருளாதார தாக்கமும்

உலகளாவிய ரீதியில் கொரோனா வைரஸினுடைய தாக்கம் அதன் வீரியம் பன் மடங்காக அதிகரித்துள்ள நிலையில் இலங்கையிலும் நாட்டின் பொருளாதாரம் பாரியளவு வீழ்ச்சி கண்டுள்ளது. இதனை தொடர்ந்து சீனா பங்களாதேஷ், இந்தியா போன்ற நாடுகளிடம் இலங்கை பல பில்லியன் ரூபாய் கடனாக பெற்றுள்ளது. இந்த கடன்களை திருப்பி கொடுப்பதா அல்லது அதற்கான பிராரச்சித்தியங்களை அரசாங்கம் மேற்கொள்கின்றதா என்கின்ற நிலைமையும் தற்பொழுது தோற்றுவிக்கப்பட்டுள்ளது. கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண பொருட்கள் தலா 5000 ரூபாய் முழுமையாக வழங்கப்படாத நிலையில் இரண்டாம் கட்ட நிவாரணமும் 5000 ரூபாய் பணமும் வழங்கப்போவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது. நிவாரணம் ஒழுங்ககானமுறையில் சென்றடையவில்லை என்பது மக்களின் குற்றச்சாட்டு. பெற்றோல் விலை அதிகரித்ததுடன் ஏனைய அத்தியாவசிய பொருட்களின் விலைகளும் அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. பல வியாபார நிலையங்களில் குறித்த அத்தியாவசிய பொருட்களான அங்கர். மா. எரிவாயு. அரிசி போன்ற பொருட்கள் மட்டுப்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது. லொக்டவுன் காலத்தில் எவருமே செல்ல முடியாத சூழலிலும் பொருட்களுக்கு அதிக விலை கொடுத்து ஒன்லைன் மூலம் பெற்றுக்கொள்கின்றார்கள் வசதிபடைத்தவர்கள். தினக்கூலி வேலை செய்பவர்களின் நிலைமை மிக மோசமாக உள்ளது.

குறிப்பாக லொக்டவுன் காலத்தில் பொருளாதாரம் வீழ்ச்சி கண்டுள்ள நிலையில் அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றம் என்பது நாட்டில் பாரிய தாக்கத்தை உருவாக்கியுள்ளது. உற்பத்தியை பெருக்குகின்றோம் என்று கூறுகின்ற கோட்டபாய ராயபக்ச அரசு தொடர்ந்தும் மக்களிடமிருந்து கூடுதல் பணத்தை அறவிடுவதற்காகவா இவ்வாறான விலையுயர்வு என்ற கேள்வியும் எழுப்பப்படுகின்றது. இதன் காரணமாக இந்த ஆட்சி கவிழ்க்கப்படுகின்ற ஒரு சூழல் உருவாக்கப்பட்டுள்ளது. நாட்டு மக்களை கொரோனா வைரஸ் காலத்தில் உரிய முறையில் பயன்படுத்தவில்லை என்று இன்று ஜனாதிபதியை குற்றம்சாட்டி பௌத்த தேரர்கள் வீதியில் இறங்கியுள்ளனர். கோட்டபாய ராஜபக்ச அரசாங்கத்திற்கு எதிராக கோசங்கள் எழுப்பப்படுகின்றது. தொடர்ந்தும் இலங்கை பெருநாடு ஒரு அதாளபாதாளத்தை நோக்கி சென்றுகொண்டிருக்கின்றது. இதனிடையே இந்தியா அமெரிக்கா சீன புலனாய்வாளர்கள் தமது பூகோள அரசியலை எவ்வாறு கட்டியெழுப்புவது தொடர்பில் தமது உளவு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். அபிவிருத்தி என்ற போர்வையில் மக்களை ஏமாற்றுகின்ற ஒரு நிலைப்பாடே காணப்படுகின்றது. அரச உத்தியோகத்தர்களை களமிறக்கி பணிகளை மேற்கொள்ள அரசாங்கம் மேற்கொண்ட விடயங்கள் தோல்வியில் முடிவடைந்துள்ளது. குறித்த அரச பணியாளர்களுக்கும் உரிய பாதுகாப்பு இன்மையால் கொரோனா வைரசினுடைய தாக்கத்தால் அவர்களும் பாதிக்கப்படுகின்றார்கள்.

ஆகவே உரிய முறையில் சுகாதார பணி, பிரதேசசபை செயலகம், நகர சபைகள் குறிப்பாக மினிசுபல் கௌன்சிலின் (குப்பை அள்ளுபவர்கள்) போன்றோருக்கு உரிய முறையிலான பாதுகாப்பு வழங்கப்படாமையினால் இன்று பலர் கொரோனா வைரசிற்குட்பட்டுள்ளனர். இவர்களுக்கான உடனடி நிவாரணங்களும் வழங்கப்பட வேண்டும். பணவளம் படைத்தவர்கள் மாத்திரம் வென்சிலின் கொரோனா தடுப்பூசிகளை போட்டுக்கொள்கின்றார்கள் என்ற குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றார்கள். குறிப்பாக பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை முன்னாள் உறுப்பினர்கள், அரசியல் கட்சியினுடைய தலைவர்கள், நாட்டின் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆலோசனைகளை வழங்கி இந்த காலகட்டத்தில் அரசியலை மேற்கொள்ளாது கொரோனா வைரசிற்கு ஒரு முடிவை கட்டிய பின்னர் அரசியலை மேற்கொள்வது புசிதமானது. இல்லையேல் இந்த நாடு சோமாலியாவை விட மிக மோசமான நிலைக்கு தள்ளப்படும்.

# உலக வரலாற்றில் குறுஞ்சமர்

**152** வானொலி நிலையத்தைக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்ததும், இதனூடாக அவர்கள் கெரில்லாக்களின் தளத்துடன் அல்லது எதிரியின் பின்புலத்தில் அமைந்துள்ள நிலையத்துடன் தொடர்பை மேற்கொள்ளக்கூடியவர்களாக இருப்பார்கள். வானொலித் தொடர்பகத்தின் நிலையம் மீதான கெரில்லாக்களின் தாக்குதலே எதிரிக்கு மிகவும் புண்படுத்தக்கூடிய அடியாக இருக்கும். அதற்குரிய ஆவணங்களுடன் வானொலி நிலையத்தைக் கெரில்லாக்கள் கைப்பற்றுதல் எதிரியின் தொடர்பாடலை அவர்கள் ஒற்றுக்கேட்க உதவியாக இருக்கும். ஏனெனில், இது கெரில்லாப் போராட்டத்தில் மிக முக்கியமானதாகும்.



**தொலைபேசித் தொடர்புகளை அழித்தல்**

நிலத்திற்குக் கீழால் செல்கின்ற தொலைபேசிக் கம்பிகளை அழிப்பது மிகக் கடினமாகும். நிலக்கீழ் கம்பி சில சிறு கம்பிக் கடத்திகள் ஒன்று சேர்ந்து உருவாக்கப்பட்டதாகும். இதனைச் சுற்றிக் காப்பிடப்பட்டிருக்கும் (காப்புறையிடப்பட்டிருக்கும்) சிலவேளைகளில் இக்கம்பிகள் இரும்பு, அஸ்பெஸ்ரஸ் போன்ற குழாய்களுக்கால் செலுத்தப்பட்டு, நிலத்தினுள் புதைக்கப்பட்டவாறு செல்லும். இவற்றைக் கண்டுபிடிப்பதிலும் அழிப்பதிலும் சிரமங்கள் இருந்தாலும், இவற்றின்மீது நாசகாரவேலை மேற்கொள்வது அவசியமாகும். தொடர்புக் கம்பிகளை அழிக்காமல், அவற்றுடன் ஒட்டுக்கேட்கும் கருவியைப் பொருத்தி, எதிரியின் உரையாடல்களை ஒட்டுக்கேட்பது மிகவும் பயனுள்ளதாகும். ஒட்டுக்கேட்கும் கருவி பொருத்துமிடம் கவனமாக உருமறைக்கப்பட்டிருக்க வேண்டும்.

இதனை அழிக்கின்ற வழிவகை கம்பி செல்கின்ற இடத்தில் நிலத்தை அகழ்ந்து (கிட்டத்தட்ட 0.8 மீற்றர் ஆழம்வரை), கடத்தியைச் சுற்றியுள்ள காப்புறையைக் களைந்து, சிறு கம்பிக்கடத்திகளை அறுத்தல், அவற்றின் முனைகளை வெவ்வேறு பக்கங்களுக்குத் திருப்பி மடக்கிவிட்டு, கம்பியின் உறையை மீளச் சுற்றிவிட்டு, நிலத்தை மூடிச் சமப்படுத்துதல் வேண்டும். வெட்டப்பட்ட கடத்தி முனைகளில் காப்புறைக்குப் பதிலாகக் கல்லை வைத்துவிடலாம். இது தரமான காப்புறையாக விளங்கும். நிலக்கீழ் கடத்தி அறுக்கப்பட்ட இடத்தைக் கவனமாக உருமறைப்புச் செய்ய வேண்டும். அப்படிச் செய்யுமிடத்து, அந்த இடத்தைக் கண்டு பிடிக்கவும் தொடர்பை மீளக் கட்டியெழுப்பவும் எதிரிக்குக் கூடியளவு நேரம் செலவாகும். வீடுகள், பாலங்கள் அமைந்துள்ள பிரதேசத்தில் இவ்வாறான தொடர்புக் கம்பிகளை அறுப்பது மிகவும் இலகுவாகும். ஆனால், இங்கே எதிரியின் காவலணிகள் நிறுத்தப்பட்டிருக்கலாம்.

நிலத்திற்கு மேலால் செல்கின்ற (கம்பங்களில் தொங்கவிடப்படுகின்ற) தொலைபேசிக் கம்பிகளை அழிப்பது கணிசமானளவு இலகுவாகும். அதற்கான வழி வகைகள்:

முதலாவது - மரத்தாலான தொலைபேசிக் கம்பங்களை அறுத்து விழுத்துதல்.

இரண்டாவது - கம்பிகளை மரங்களுடன் பிணைத்துவிடுதலும் கம்பிகளின் மேல் அமிலத்தை அல்லது பிற பதார்த்தங்களை ஊற்றிவிடுதலுமாகும். இது கடத்தியின் அழிவுக்கு இட்டுச்செல்கின்றது.

மூன்றாவது - ஆதாரத்தூண்களைத் தகர்ப்பின் மூலம் அழித்தல். இச் சந்தர்ப்பத்தில், தகர்ப்பின் பின்னர் கண்ணிவெடியை அங்கு வைப்பதும் நல்லது. இது மீள ஆதாரத் தூணை நாட்டும்போது, வெடித்துச் சிதறுகின்றது. இதனால், இவ்வேலையைச் செய்பவர்கள் மத்தியில் பயமும் ஏற்படுகின்றது.

நான்காவது - கயிற்றில் பாரமான பொருளொன்றைக் கட்டி, அதனைக் கடத்திமேல் எறிந்து, பின்னர் கயிற்றைப் பிடித்து ,ழுத்துக் கடத்தியை அறுத்தல்.

**மின்சார வலையமைப்புக்களையும் துணைநிலையங்களையும் அழித்தல் வழிவகைகள் :**

முதலாவது - ஆதாரத் தூண்களை வெடிமருந்துக் குண்டுகளை வைப்பதன் மூலம் தகர்த்தல்.

இரண்டாவது - தேவையானளவு மின்சாரக் கம்பிகளை எடுத்து, ஒரு முனையைத் தரையில் வைத்துவிட்டு, மறுமுனையில் உலோகப் பொருளை அல்லது கல்லைக்கட்டி, மின்சாரக்கடத்திகளுக்கு எறிதல்.

மூன்றாவது - கனமான பொருட்களால், குறிப்பாக உலோகப் பொருட்களால் (கடத்திக்கம்பியே சிறந்தது) மின்வழங்குகின்ற கடத்திகளுக்கு எறிதல்.

மின்மாற்றி நிலையங்களின் வலைமையயும் அவற்றின் அமைவிடத்தையும் பொறுத்து, அவை எதிரியால் காவல் காக்கப்படலாம். ஒழுங்குவிதிப்படி, இச் சூழ்நிலையில் அவர்கள் முட்கம்பி வேலிகளை அதனைச் சுற்றி ஏற்படுத்துகின்றார்கள். இவ்வாறான நிலையத்தில் இராணுவ அல்லது காவற்றுறை முகாம் அமைந்திருக்கும். அத்துடன், இந்நிலையத்தில் பணியாற்றும் ஆட்களும் இருப்பார்கள்.

மின்மாற்றி நிலையத்தின் மீது தாக்குதல் தொடுப்பதற்காகக் கெரில்லாக்கள் மூன்று குழுக்களாகப் பிரிக்கப்படுகின்றனர்.

முதலாவது - தாக்குதல் குழு : இக்குழு வேலித்தடைகளை உடைத்து, காவலாளர்களுடன் சமரிட்டு, நிலையத்தினுள் புகுந்து, தொலைபேசித் தொடர்பைத் துண்டிக்கின்றது.

இரண்டாவது - சேமக்குழு : முதலாவது குழு மின்மாற்றிகளைத் தகர்ப்பதற்குத் துணைபுரிகின்றது. அவற்றைத் தகர்ப்பு மூலம் அழிப்பதே சிறந்தது. ஒரு மின்மாற்றிக்கு 4கி.கி வெடிமருந்து போதுமானதாகும். ஏனைய பொருட்களைச் சுத்தியலின் உதவியால் அழிக்கலாம்.

மூன்றாவது - காப்பளிக்கின்ற குழு : இக்குழு மின்மாற்றி நிலையத்திற்கு வருகின்ற வீதிகளைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றது. வருகின்ற எதிரிகளைத் தடுத்து நிறுத்துகின்றது. ஏனைய குழுக்கள் பின்வாங்குவதற்கு ஆதரவளிக்கின்றது.


**எரிபொருட்களஞ்சியத்தை அழித்தல்**

எரிபொருள், உராய்வுநீக்கிப் பொருட்களைக் கொண்ட கூடுதலான களஞ்சியங்கள் (தளங்கள்) மக்கள் வாழ்விடங்களுக்கருகில் (மக்கள் வாழ்விடங்களில்), வாகனத் தரிப்பிடங்களில் அமைந்துள்ளன. ஒவ்வொரு களஞ்சியமும் காவல் காக்கப்படுகின்றன. அதற்குப் பொறுப்பானவர்கள், பணியாளர்கள், காவலாளர்கள்போன்றோர்களுக்கான தங்குமிடத்தைக் கொண்டிருக்கின்றதுடன், எரி பொருளுக்கான கொள்கலன்களையும் (நிலக்கீழ், நிலத்திற்கு மேலமைந்த) கொண்டிருக்கின்றது.

இவ்வாறான களஞ்சியங்களைச் சேதப்படுத்துவதற்காகக் (அழிப்பதற்காக) கெரில்லாக்கள் மூன்று குழுக்களாகச் செயற்படுகின்றனர். தாக்குதல் குழு காவற்கடமையாளர்களை மடக்கி, காவலாளர்களை அழிக்கின்றதுடன், களஞ்சியத்தின் தொடர்பைத் துண்டித்து, களஞ்சியத்தின் பணியாளர்களையும் நிர்வாகத்தினரையும் தொடர்பற்ற நிலைக்கும் உள்ளாக்குகின்றது.

**நெற்றிபொறியன்**
**தொடர்வான்...**

# சீனா, இந்தியா, அமெரிக்கா நாட்டு புலனாய்வாளர்களும் இலங்கை அரசின் இன்றைய நிலையும்



நாட்டில் தற்பொழுது நடந்துகொண்டிருக்கின்ற கொரோனா வைரஸினுடைய தாக்கம், மறுபுறத்தில் இலங்கையினுடைய பொருளாதாரம், மறுபுறத்தில் சீனா அமெரிக்கா இந்தியா போன்ற நாடுகளுடைய இந்த நாட்டுக்குள் அவர்களுடைய பொருளாதார கட்டமைப்பினுடைய ஆக்கிரமிப்பு அல்லது இலங்கை துறைமுகம் சார்ந்த பிரச்சனை, அம்பாந்தோட்டடை பிரச்சனை, திருகோண மலை பிரச்சனை, கடல் மார்க்கமான பாதை களை அபகரிப்பதற்கு அமெரிக்காவினுடைய பிரச்சனை, அமெரிக்க புலனாய்வாளர்கள் உள்நுழைந்த பிரச்சனை, இந்தியா தனது கட்டுப்பாட்டுக்குள் வடகிழக்கு இணைந்த பகுதிகளை வைத்திருக்க வேண்டும் 13ஐ நிறைவேற்ற வேண்டும் என்ற பிரச்சனை இப்படியெல்லாம் இந்த நாட்டின் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச அவர்கள் ஒரு அதிஷ்டம் இல்லாதவராக தேர்தல் மூலம் இந்த நாட்டை கையில் எடுத்துவிட்டார்.

இப்பொழுது அதிலிருந்து அவர் மீள்வதற்கு பெரும்சிரமங்களை அனுபவித்துவருகின்றார் என்பதனை நாம் வெளிப்படையாக காணக்கூடியதாக இருக்கின்றது. அது எவ்வாறிருப்பினும் இந்த நாட்டில் 30 ஆண்டுகால யுத்தம் இடம்பெற்றது இதனை நாம் அனைவரும் அறிந்த விடயம். இதிலே தமிழீழ விடுதலைப்புலிகள் நீதி கேட்டு போராடினார்கள். வடகிழக்கிணைந்த தமிழர் தாயகம் இணைக்கப்பட வேண்டும். இதற்காக உள்ளூர் பேச்சு வார்த்தைகளாக 14 பேச்சு வார்த்தைகளும் சர்வதேச பேச்சுவார்த்தைகளாக அதாவது திம்பு முதல் டோக்கியோ வரையிலான பேச்சுவார்த்தைகளாக பிரதானமாக 7 பேச்சு வார்த்தைகளும் இடம்பெற்றிருந்தது. இதிலே சர்வதேச சூழ்ச்சி சதிவலைகளினூடாக இந்த போராட்டம் ஒரு மௌனிப்பை அடைந்தது. இதிலே அரசாங்கம் இறுதியிலே வெற்றிபெற்றது என்பது அனைவருக்கும் தெரியும்.

ஆகவே சர்வதேசம் என்கின்ற பொழுது தமிழினத்தின் மீது திட்டமிட்டு இந்த போரை மாவிலாறில் இருந்து முள்ளிவாய்க்கால் வரையிலும் நடத்தியிருந்த பொழுதிலும் கூட ஏறெடுத்து பார்க்காத இந்த சர்வதேசம் இனியும் எங்களை ஏறெடுத்து பார்க்கப்போவதில்லை. அவர்கள் தமது சுயலாப அரசியலைத் தான் இந்த நாட்டுக்குள் செய்துகொண்டிருக்கின்றார்கள் என்பது புலப்படுகின்றது. அதாவது ஜெனீவாவின் பேச்சுவார்த்தை 47,48,49 என்று கடந்து சென்றுவிட்டது இதிலே என்ன பிரதிபலிப்பை நாங்கள் அடைந்திருக்கின்றோம் என்ற கேள்வியை நாம் கேட்டுப்பார்க்க வேண்டியுள்ளது.

ஆனால் தொடர்ந்தும் தமிழினம் தமிழ் மக்கள், தமிழ் அரசியல் தலைமைகள் குரல் கொடுத்துக்கொண்டிருக்கின்றார்கள். குரல் கொடுப்பதற்கு ஆயுத ரீதியிலான முடிவு வரவேண்டும் அல்லது அகிம்சை ரீதியிலான முடிவு வரவேண்டும். இதனை ஏமாற்றுகின்ற அரசியலும் அரசாங்கத்தின் கைக்கூலிகளாக செயற்படும் அரசியலையும் செய்வதை விட்டுவிட்டு தற்பொழுது இந்த நாடு அதாளபாதாளத்திற்குள் சென்றுகொண்டிருக்கின்றது. கொரோனா வைரஸினுடைய தாக்கத்திலிருந்து முதலாவதாக நாட்டை காப்பாற்ற வேண்டிய தேவை தமிழர்களாகிய எங்களுக்கு இருக்கின்றது. அதுபோன்று பொருளாதாரத்தில் வீழ்ச்சியடைந்த நாட்டை கட்டியெழுப்ப வேண்டிய தேவையும் தமிழர்களாகிய எங்களுக்கு இருக்கின்றது. இன்று சீனாவிடம் கையேந்துகின்ற நிலைமை அரசாங்கத்திற்கு ஏன் உருவாகியது? அவ்வாறிருந்தால் வடகிழக்கிணைந்த தமிழர் தாயகத்தை எங்களுக்கு தருவதற்கு தேவையானால் கோடிக்கணக்கான பில்லியன்களை விலை கொடுத்து வாங்குவதற்கும் தமிழ் தரப்பு தயாராக இருக்கின்றது. அதாவது நாடுகடந்த தமிழீழ அரசாங்கங்கள் கூட தயாராக இருக்கின்றது. ஆனால் 1500 அல்லது 1000 கெக்டயர் ஏக்கர் நிலப்பரப்பை சீனாவிற்கு போர்ட்சிட்டி வழங்கியுள்ளது எந்த நிபந்தனைகளுமன்றி. இதிலே உள்ளூர் அரசியல் தலைமைகள் தலையிடக்கூடாது என்றும், 4000 சீனக்குடியிருப்பாளர்கள் இங்கு வந்து தமது தொழில் வாய்ப்புக்களை மேற்கொள்ளப்போகின்றார்கள்.

ஆசிய பிராந்தியத்திலே பாரியதொரு வியாபார தளமாக வரப்போகின்றது என்றெல்லாம் பல விடயங்கள் இருக்கின்றன. அவையனைத்தும் உண்மை தான் இல்லையென்றில்லை. ஆனாலும் ஒரு தமிழினம், தமிழர் தாயகம் என்பது காலாகாலங்களாக தந்தை செல்வா தொடக்கம் ஒரு போராட்டம் இந்த நாட்டில் இடம்பெற்றது. அகிம்சை ரீதியாக மற்றும் உண்ணாவிரதப் போராட்டம் இடம்பெற்றது இதிலே ஒரு நுணுக்கமான விடயத்தை பார்க்க வேண்டும் என்னவென்றால் இலங்கை அரசானது இந்தியாவை தமிழர்கள் மத்தியில் அல்லது தமிழீழ விடுதலைப்புலிகள் மத்தியில் பகைமையை உருவாக்க வேண்டும் என்பதில் தெளிவாக இருந்தார்கள். அந்த தெளிவை அவர்கள் ஏற்படுத்திய பின்பு தான் தமிழீழ விடுதலைப்புலிகளுடனான யுத்தத்தில் அவர்கள் வெற்றி கண்டார்கள். அடுத்த நடவடிக்கையாக முஸ்லிங்கள் அரசாங்கத்தின் ஒட்டுண்ணிகளாக அல்லது காட்டிக்கொடுப்புக்களை செய்து வந்த காலகட்டத்தில் அவர்களை விடுதலைப்புலிகளுக்கு எதிராக பயன்படுத்திய பின்னர் இலங்கை அரசானது மீண்டும் தமிழினத்திற்கு எதிராக அவர்களை திசைதிருப்பி செயற்பட்டது. அதிலே அவர்களும் வெற்றி கண்ட பிற்பாடு இன்று அவர்களை கால் செருப்பாக கூட முன்னாள் அமைச்சர்களையோ பாராளுமன்ற உறுப்பினர்களையோ கனக்கெடுக்காத வகையில் இன்று முன்னாள் அமைச்சர் ஹிஷ்புல்லா அவருடைய பல்லை பிடுங்கிவிட்டார்கள். முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியூதின் அவருடைய பல்லையும் பிடுங்கி இன்று அவர்களை நிராயுதபாணிகளாக விட்டிருக்கின்றார்கள். அவர்கள் எந்த பதவிகளுமன்றி பாராளுமன்ற உறுப்பினர்களாக மட்டுமே இருக்கின்றார்கள்.

இவ்வாறிருக்கும் பொழுது இங்கு நுழைந்திருக்கக்கூடிய சீனா, அமெரிக்கா, இந்தியாவினுடைய புலனாய்வுகள் வியாபார ரீதியாக உள்நுழைந்திருக்கின்றார்கள், தொழில் அதிபராக உள்நுழைந்திருக்கின்றார்கள், தொழிற் சாலைகளை உருவாக்குகின்ற எண்ணத்திலே உள்நுழைந்திருக்கின்றார்கள். மூங்கில், செய்கை எள்ளு, கருவா போன்ற செயற்பாடுகளை செய்யும் வகையில் விவசாயத்தை மேம்படுத்துகின்றோம் என்ற ரீதியில் வவுனியா, திருகோணமலை, அம்பாந்தோட்டை, குருநாகல், மட்டக்களப்பு, பொத்துவில் போன்ற பகுதிகளிலே இந்தியா தற்பொழுது களமிறங்கியிருக்கின்றது. இந்தியா தமிழினத்திற்கு செய்த துரோகங்களில் இறுதிக்கட்ட துரோகமாக இதனை செய்யப்போகின்றது. மீண்டும் தமிழ் ஆயுதக்குழுக்களை அல்லது தமிழர்களை தமிழ் இளைஞர்களை இலங்கை அரசிற்கு எதிராக போர் தொடுக்க வைக்கப்போகின்றது. அல்லது போனால் சிங்கள இளைஞர்களை ஆயுதம் ஏந்தி இந்த அரசிற்கு எதிராக ஒரு போரை கட்டவிழ்த்து விட தயாராகிக்கொண்டிருக்கின்றது. அதற்காக தனது உளவு நடவடிக்கைகளை இலகுவாக நகர்த்தி வருகின்றது இந்த அந்நிய அரசாங்கம். இதிலே தமிழினத்தின் மீது இந்தியா போர் தொடுத்தது தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவரை கைது செய்வதற்கான போர் தொடுத்தது. இறுதியில் அதிலே தோல்வியடைந்துவிட்டார்கள். அவ்வாறிருக்கின்ற பொழுது இந்தியாவை நம்பி மீண்டும் தமிழினத்திற்கு ஒரு விடிவை தேடித்தருவார்கள் அல்லது வடகிழக்கிணைந்த தமிழர் தாயகத்தை இணைத்து தருவார்கள் என்பதெல்லாம் இனி பகல் கனவு. இந்தியா இந்த வடகிழக்கிணைந்த தமிழர் தாயகத்தை பெற்றுத்தராது போனால் சீனாவோ அமெரிக்காவோ வேறு எந்த நாடுகளோ அல்லது ஐக்கிய நாடுகள் சபையோ இதனை ஒருகாலமும் பெற்றுத்தரமுடியாது.

ஆகவே இவ்வாறான பிரச்சனைகள் எல்லாம் இந்த நாட்டில் தற்பொழுது தமிழினத்திற்கு எதிராக இருந்துகொண்டிருக்க நாங்கள் இந்த கொரோனா வைரஸிற்கு எதிராகவும் சீனாவினுடைய புலனாய்வு, அமெரிக்காவினுடைய புலனாய்வு, இந்தியாவினுடைய புலனாய்விற்கு எதிராக எங்களுடைய போர்களை நாங்கள் கட்டவிழ்த்துவிட வேண்டிய தேவை எங்களுக்கு இருக்கின்றது. சீன நாட்டின் உதவி என்பது ஒரு காலத்தில் இந்த இடத்தில் ஒரு சீன காலணித்துவம் உருவாகின்ற சூழல் இருக்கின்றது. பாராளுமன்றத்தில் போட்டியிடுகின்ற சூழல் உருவாகும். அதை விட இந்தியாவினுடைய வடகிழக்கில் சமஷ்டி என்பது ஓரளவேனும் ஏற்றுக்கொள்ளப்படும் ஏனென்றால் அவர்கள் இந்த நாட்டுக்குள் நுழைவதற்கான வாய்ப்புக்கள் இல்லை. கச்சைதீவை மீட்பதற்கான அடுத்தகட்ட நடவடிக்கையை இந்திய அரசு மேற்கொண்டு வருகின்றது.

ஏனென்றால் சீனாவினுடைய ஆக்கிரமிப்பு என்பது கொழும்பு துறைமுகத்திலும் அம்பாந்தோட்டை துறைமுகத்திலும் அதுமட்டுமல்லாது கொழும்பு முழுவதும் அவர்கள் ஆக்கிரமிக்கின்ற ஒரு சீன சந்தை தான் தற்பொழுது கொழும்பிலே இடம் பெற்றுக்கொண்டிருக்கின்றது என்று பேசப்படும் அளவிற்கு நிலைமை மாறிவிட்டது.

ஆகவே இந்த நாட்டின் மீது எங்களுக்கு ஒரு உரிமை இருக்கின்றது. தமிழீழ விடுதலைப்புலிகள் இருந்த காலகட்டத்தில் வடகிழக்கில் அல்லது இலங்கைக்கு எந்தவொரு சர்வதேச நாடுகளினுடைய யுத்த கப்பலும் இந்த நாட்டுக்குள் வந்துபோனது இல்லை. அதுபோன்று கடல் மார்க்கமாகவும், தரை மார்க்கமாகவும், ஆகாய மார்க்கமாகவும் வரவில்லை. அனைத்தையும் சுட்டு வீழ்த்துவதற்கும் தாக்குதல் நடத்துவதற்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் தயாரான நிலையிலும் ஒரு வலுவான சக்தியாகவும் கடல், வான், தரை என்ற கட்டமைப்புக்களை கொண்டிருந்தார்கள். இதனை நாம் ஒப்புக்கொள்ள தான் வேண்டும். அது போன்றதொரு கட்டமைப்பை இந்த இலங்கையிலே நாங்கள் உருவாக்க வேண்டும். இந்த அரசாங்கத்துடன் சேர்ந்து உருவாக்க வேண்டும் அல்லது தனியாக உருவாக்க வேண்டிய தேவை இருக்கின்றது. இந்த அரசாங்கம் தாரை வார்த்து சீனாவிற்கு கொடுக்கின்ற பொழுது எங்களுடைய தமிழ் மொழி புறக்கணிக்கப்படுகின்றது. தமிழ் மொழியை புறக்கணித்து சீன மொழியை இணைத்து சிங்கள மொழியும் இயல்பாக இணைத்துக்கொள்ளும் சூழ்நிலை இந்த நாட்டில் உருவாகியிருக்கின்றது.

ஆகவே தமிழ் பிரதேசங்களிலே சீன மொழி ஊடுறுவுமாக இருந்தால் அது பாரியதொரு பிரச்சனையை உருவாக்கும். தமிழ் பகுதிகளில் இருக்கின்ற சீன மொழி பதாதைகளை உடைத்தெறிகின்ற நடவடிக்கைகளை இந்த பிரதேச செயலகங்கள் மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு செய்யாதிருந்தால் இவர்களுடைய மொழி ஊடுறுவுமாக இருந்தால் அடுத்து அவர்களுடைய கலை கலாச்சாரம் என்று அனைத்தும் உள்வாங்கப்படும். இன்றைய காலகட்டத்தில் மிக அவதானமாக இந்த கொரோனா வைரஸிற்கு எதிராக செயற்படுகின்ற அதேநேரம் இந்த நாட்டில் செயற்படுகின்ற அந்நிய நாட்டு புலனாய்வாளர்களுக்கு எதிராகவும் நாங்கள் செயற்பட வேண்டிய தேவை இருக்கின்றது. துரிதகதியிலே அந்த நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டு எமது நாட்டை பாதுகாக்கின்ற நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். இலங்கையிலே கொரோனா வைரசே பரவாத ஒரு நிலை இருந்தது. உலக நாடு அனைத்திலும் கொரோனா வைரஸ் தீவிரமடைந்த பொழுது இலங்கையிலே வெறும் 5 பேருடைய மரணங்கள் தான் பதிவு செய்யப்பட்டிருந்தது முதலாவது அலையிலே. இரண்டாவது அலையிலே 10 பேருடைய மரணங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தது. தற்பொழுது மரணங்கள் 2000 ஐ தாண்டிவிட்டன. இன்று பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 2 இலட்சத்தை தாண்டிவிட்டனர். நினைத்து பாருங்கள் இன்றைய நாட்டின் நிலைமையை. ஆகவே தமிழ் மக்களாகிய நாம், சிங்கள மக்களாகிய நாம், முஸ்லிம் மக்களாகிய நாம் ஒன்றை சிந்திக்க வேண்டும் இந்த நாட்டை பாதுகாக்க நாம் களத்தில் இறங்க வேண்டும்.

**இரணியன்**

# தமிழ் தேசிய கூட்டமைப்பின் அண்மைக்கால இராஜதந்திர நகர்வுகள் கோட்டபாய ராஜபக்சவின் ஆட்சியை கவிழ்க்கும் சூழ்ச்சியாகும்



இன்றைய சமகால அரசியல் பார்வையை நோக்குமிடத்து நாட்டின் பொருளாதார ரீதியாகவும், அந்நிய நாடுகளின் ஆக்கிரமிப்புக்கள் ரீதியாகவும், தமிழ் மக்களுக்கான தீர்வுதிட்டம் தொடர்பாகவும் தமிழ் தேசிய கூட்டமைப்பு தமிழ் அரசியல் காய் நகர்த்தல்களை ஆமை வேகத்தில் நகர்த்திவந்த வேளையிலும் இன்று இந்த நாட்டு மக்களின் அவல நிலை கண்டு அதிரடியான செயற்பாடுகளில் களமிறங்கியுள்ளது.

குறிப்பாக மாறி மாறி ஆட்சிக்கு வந்த ஆட்சியாளர்கள் அனைவரும் தமிழ் மக்களுக்கான தீர்வுதிட்டம் என்ற விடயத்தில் அக்கறையுடன் செயற்படவில்லை. மாறாக பேச்சு வார்த்தைகள் என்ற போர்வையில் இழுத்தடிப்பு அரசியலையே நகர்த்தி வந்தனர். ஆரம்ப கட்டத்தில் த.தே.கூ. 22 ஆசனங்களை பெற்று வடகிழக்கில் பாரியதொரு சக்தியாக விளங்கியது. அதன் பிற்பாடு படிப்படியாக அக்கட்சியை உடைக்கும் நடவடிக்கைகளில் அரசாங்கம் தீவிரம் காட்டியது. இதனால் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் புலனாய்வு பிரிவினராலும் அரசியல் தரப்பினராலும் தமது அரசியல் நடவடிக்கைகளை கொண்டுசெல்ல முடியாமல் போனது. இருந்தும் த.தே.கூ. பாராளுமன்றத்தில் குரல்கொடுக்க தவறவில்லை. குரல் கொடுத்தவர்களின் குரல்வலைகள் நசுக்கப்பட்ட வரலாறும் இருக்கின்றது. இதில் 35 ஊடகவியலாளர்களும் 179 அரசியல் புத்திஜீவிகளும் உள்ளடக்கப்படுகின்றனர். ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் மட்டும் தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை என்ற நிலைப்பாட்டை வலியுறுத்தி வரலாற்று கட்டுரைகள் நடைமுறை செய்திகள் புலனாய்வு செய்திகள் படப்பிடிப்பாளர்கள் போன்றோரின் செயற்பாடு என்பது அரசாங்கத்தின் போர் உத்திகளுக்கு பாரிய விரிசல்களை ஏற்படுத்தியது என்ற காரணத்தினாலேயே மேற்குறிப்பிடப்பட்ட அரசியல் புத்திஜீவிகளும் ஊடகவியலாளர்களும் அரச தரப்பாலும் ஆயுத தாரிகளாலும் சுட்டுக்கொல்லப்பட்டனர். தமிழ் தேசிய கூட்டமைப்பை பொறுத்தவரையில் ரவிராஜ், ஜோசப் பரராஜசிங்கம் போன்றவர்களை தமிழ் தேசிய கூட்டமைப்பு இழந்ததன் ஊடாக பாரிய பின்னடைவை சந்தித்தது. அதனை தொடர்ந்து தமிழ் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளர்களாக சுரேஸ் பிரேமச்சந்திரன், திரு.சுமந்திரன் அவர்களும் செயற்பட்டார்கள். தற்பொழுது த.தே கூட்டமைப்பின் ஊடக பேச்சாளரும் கூட யார் என்பது சரியானதொரு முடிவு எடுக்கப்படவில்லை.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் காலத்திற்கு பின்னர் யார் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவராக வருவதென்று இழுபறிகளுடன் இடம் பெற்றுக்கொண்டிருக்கின்றது. இந்த நிலையில் த.தே.கூட்டமைப்பானது கொரோனா வைரஸிலிருந்து மக்களை காப்பாற்றவும் தமிழ் கட்சியின் ஒற்றுமையை வலியுறுத்தியும் தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து களத்தில் குதிப்பதாக தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா அறிவித்திருந்தார். அதனைத் தொடர்ந்து தமிழ் பேசும் மக்களுக்காக குரல் கொடுத்து வந்த பல கட்சிகள் ஒன்றிணைவதற்கான செயற்பாடுகளை தற்பொழுது மேற்கொண்டு வருகின்றார்.



உண்மையில் என்னவென்றால் தமிழ் கட்சிகளை ஒன்றிணைவதை அரச தரப்பு ஒருபோதும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. மாறாக அவர்களுக்கிடையில் பிளவுகளை ஏற்படுத்துகின்ற நிலைப்பாட்டையே இவர்கள் செய்து வருகின்றார்கள். ஆரம்பத்தில் குறிப்பிட்டதைப்போன்று 22 பாராளுமன்ற உறுப்பினர்களை கொண்ட த.தே.கூ. எவ்வாறு பிளவுபட்டது என்ற வரலாறு நாம் அனைவரும் அறிந்ததே. அரசியல் பேச்சுக்கள் வெவ்வெறு கட்டங்களாக அமையப்பெற்றாலும் மக்களை தொடர்ந்தும் ஏமாற்றுகின்ற ஒரு அரசியலையே த.தே.கூட்டமைப்பும் அக்காலகட்டங்களில் செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டது. மகிந்த ராஜபக்சவை ஆதரியுங்கள் என்று ஒரு காலகட்டத்திலும், சரத் பொன்சேகாவை ஆதரியுங்கள் என்று ஒருகாலகட்டத்திலும், மைத்திரியை ஆதரியுங்கள் என்று ஒரு காலகட்டத்திலும் இப்படி த.தே.கூட்டமைப்பு காலத்துக்கு காலம் ஒவ்வொரு கட்சித்தலைவர்களையும் கைகாட்டிய பொழுது தமிழ் மக்கள் அதனை ஏற்றுக்கொண்டார்கள்.

த.தே.கூட்டமைப்பு பிளவுபட்டமையினால் ஏற்கனவே த.தே.கூட்டமைப்பிலிருந்து போட்டியிட்டு வென்றவர்கள் அந்த கட்சியை விட்டு வெளியேறி மீண்டும் போட்டியிட்டு வெல்லமுடியாமல் போனது. கிழக்கு மாகாணத்தில் வியாழேந்திரன் மட்டும் துரதிஷ்டவசமாக வெற்றிபெற்றார். கட்சி உடைவுகளினால் த.தே.கூட்டமைப்பு பலவீனப்படுகின்றது என்பதை நன்கு அறிந்துகொண்ட த.தே.கூட்டமைப்பு தமிழினத்தின் விடுதலைக்காக போராடிய ஆயுத கட்சிகளையும் இணைத்துக்கொண்டு தொடர்ந்தும் ஒரு வலுவான கட்சியாக செயற்படுவதற்கான அனைத்து திட்டங்களும் வகுக்கப்பட்டு வந்துள்ள நிலையில் அவசரஅவசரமாக நாட்டின் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச அவர்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பை 16.06.2021 அன்று சந்திப்பதாக இருந்தது. இருந்தபோதிலும் கடும் நிபந்தனைகளை விதிக்கும் வகையில் நாம் அரசாங்கத்தை ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்சவை சந்திப்போம் என்ற த.தே.கூட்டமைப்பின் நிலைப்பாட்டை அறிந்த கோட்டபாய தரப்பு அச்சந்திப்பை நிராகரித்துவிட்டது.

இதனால் ஏமாற்றமடைந்துள்ள த.தே கூட்டமைப்பு தற்போதைய கொரோனா காலகட்டத்தில் அரசாங்கம் எதிர் நோக்குகின்ற பிரச்சனைகளை தம் தலையில் சுமத்திக்கொள்கின்ற ஒரு விடயம் தவறிவிட்டது என்றே கூறலாம். இச் சந்திப்பானது நடைபெற்றிருந்தால் இதுவொரு இராஜதந்திர நகர்வாகவே இருந்திருக்க வாய்ப்பில்லை. கொரோனா வைரஸ் கட்டுப்படுத்துவது தொடர்பாகவும் சுகாதார விதிமுறைகளை பேணுவது தொடர்பிலுமே பேச்சுக்கள் இடம்பெற்றிருக்கும். குறிப்பாக இக்காலகட்டத்தில் பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதற்காக எந்த பேச்சு வார்த்தைகளையும் அரசாங்கம் மேற்கொள்ளவில்லை. அவ்வாறிருக்க தமிழினத்தை தொடர்ந்தும் ஒரு பயங்கரவாத அச்சுறுத்தலுக்குள் முடக்கிக்கொண்டு த.தே கூட்டமைப்புடன் பேச்சுக்கள் நடத்தினோம் என்று கூறுவது ஒரு வேடிக்கையான விடயமே. தற்பொழுது த.தே கூட்டமைப்பின் நகர்வானது இந்திய அரசாங்கத்தை அடியொட்டியதாகவே அமையப்பெற்றுள்ளது. ஆகவே த.தே கூட்டமைப்புடன் பேசியே ஆக வேண்டும் என்ற கட்டாயத்திற்குள் இலங்கை அரசு தள்ளப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளால் உருவாக்கப்பட்ட த.தே.கூட்டமைப்பை இல்லாதொழிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலே இந்த அரசாங்கம் செயற்படுகின்றது. மாற்று நடவடிக்கைகளின் ஊடாக தமிழ் இனத்திற்கான விடுதலையை பெற்றுக்கொடுக்க த.தே.கூ. பல முயற்சிகளை மேற்கொண்டும் அது முடியாமல் போனது. இனப்படுகொலைக்கான தீர்வு தொடர்பில் சர்வதேச மன்னிப்புச்சபையிலும் ஐக்கிய நாடுகள் சபையிலும் பேசப்பட்டுவந்த பேச்சுக்கள் அனைத்தும் கிடப்பில் போடப்பட்டதொன்றாகவே தற்பொழுது இருக்கின்றது. பூகோள ரீதியாக சீனாவும் இந்தியாவும் இலங்கை மீது அழுத்தம் கொடுக்குமாக இருந்தால் GSP + வரிச்சலுகை நிறுத்தப்படுமாக இருந்தால் இலங்கை அரசானது பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்படும்.

இறுதியில் அனைத்து நாடுகளிடமும் கையேந்தும் நிலைமை உருவாகும். பூனைக்கு மணி கட்டுவது யார் என்ற நிலைப்பாட்டிலே இங்கு இந்தியா அமெரிக்கா இலங்கை அரசாங்கத்தின் மீது ஒரு கண்ணோட்டத்தில் செயற்படுகின்றது. தமிழீழத்திற்கு எதிராக நடைபெற்ற போராட்டங்களை அங்கு இடம்பெற்ற கொலைகளை போர்க்குற்றம் என்ற ஒரு வரையரைக்குள் இலங்கை அரசு கொண்டுசெல்ல விரும்புகின்றது. இந்த பிரச்சனை என்னவென்றால் வெள்ளைக்கொடியுடன் சரணடைந்தவர்களுக்கான நீதி வேண்டும் என்பதே. அதனை இன்று த.தே.கூ. சர்வதேச ரீதியாக வலியுறுத்தி வருகின்றது.

வெள்ளைக்கொடியுடன் சரணடைந்தவர்களை உரிய முறையில் சர்வதேசத்திடம் த.தே.கூ. கொண்டுசெல்லுமாக இருந்தால் வடகிழக்கிணைந்த தமிழர் தாயகம் தமிழர் கையில் ஒப்படைக்கும் நிலை உருவாகும். மற்றுமொரு ஆயுத போராட்டம் சாத்தியமில்லை என்று எடுத்த எடுப்பில் கூறிவிட முடியாது. அது தமிழின விடுதலையில் தான் தங்கியிருக்கின்றது. முற்றாக தமிழ் மக்களுக்கான தீர்வு மறுக்கப்படும் பட்சத்தில் த.தே கூட்டமைப்பு அரசாங்கத்தின் மீது பாரிய அழுத்தம் ஒன்றை மேற்கொள்வதற்கான இரகசிய திட்டங்களை வகுத்து வருகின்றது. அதனை விரைவில் வெளிப்படுத்தும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

**இரணியன்**

# கோட்டபாய ராஜபக்சவின் குடும்ப அரசியலை புறக்கணிக்கும் பௌத்த துறவிகள்

இலங்கை ஒரு பௌத்த நாடு என்ற கோசமே இனவாத பௌத்த துறவிகள் கொண்டிருக்கின்றார்கள். இருப்பினும் இந்த நாட்டிற்கு ஒரு பிரச்சனை வருகின்ற பொழுது அதனை மூவின மக்களின் உத்தேசத்துடனேயே தீர்க்கப்பட வேண்டும். ஆனாலும் சிங்கள பேரினவாதிகளாக செயற்படுகின்ற பௌத்த துறவிகளின் இனவாத பேச்சுக்களும் அவர்களுடைய தனிப்பட்ட மக்கள் ஆளுமையுமே இந்த நாட்டின் ஜனாதிபதி யார் என்பதை தீர்மானிக்கின்றன. அதன் அடிப்படையில் இந்த நாட்டுக்குள் வடகிழக்கிணைந்த தமிழர் தாயகம் உருவாகிவிடக்கூடாது என்பதில் மிகத்தெளிவாக உள்ளனர்.

சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்போடு தமது நாட்டுக்கு தீர்வு கிடைக்கக்கூடாது என்பதிலும்அந்நியநாட்டுசக்திகளைஇந்த நாட்டுக்குள் ஆளக்கூடாது என்பதிலும் இவர்கள் தமது தனித்துவத்தை பேணி வருகின்றார்கள். பௌத்த துறவிகளையே எதிர்த்துக்கொண்டு இந்த நாட்டை ஆட்சி செய்தவர்கள் தொடர்ந்தும் ஆட்சி செய்ய முடியாது என்பதே யதார்த்தம். ஆனாலும் சர்வதேச வீற்றோ பவர் கொண்ட நாடு ஒன்றின் உதவியோடு மட்டுமே வடகிழக்கிணைந்த தமிழர் தாயகம் ஒன்றை உருவாக்க முடியும்.


பூகோள ரீதியில் அரசியல்கள் இந்த நாட்டில் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அமைதிப்படை என்ற போர்வையில் 1987 ஆம் ஆண்டு இலங்கைக்குள் காலடி எடுத்து வைத்த இந்திய இராணுவம் சிதறியோடும் வகையில் பௌத்த துறவிகளின் ஆலோசனையோடு அப்போதைய நாட்டின் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசாவின் ஆட்சி அதிகாரத்தில் இருக்கின்ற பொழுது ஜே ஆர் ஜெயவர்தனவின் இராஜதந்திர அணுகுமுறையோடும் ரஜீவ் காந்தி இந்தியாவில் வைத்து 1991 மே 21 அன்று தமிழீழ விடுதலைப்புலிகளைப் பயன்படுத்தி தற்கொலை குண்டுத்தாக்குதல் ஒன்றை நிகழ்த்தினார். அப்படியிருந்தும் இலங்கை அந்த இராஜதந்திரத்தை அறியாத வகையில் தமிழினத்தையும் தமிழீழ விடுதலைப்புலிகளையும் பகைத்துக்கொண்டது பாரியளவில் யுத்தம் வெடித்தது. அதுமட்டுமன்றி இந்திய பிரதமர் ரஜீவ் காந்தி 1987 ஆம் ஆண்டு இலங்கைக்கு வருகை தந்த பொழுது அவரை அணிவகுப்பில் வைத்து ஆயுதத்தால் தாக்கிய கடற்படை வீரர் விஜித ரோஹண விஜேமுனி. இச்சந்தர்ப்பத்திலும் இலங்கை அரசினுடனேயே இந்திய அரசு கை கோர்த்துக்கொண்டிருந்தது. இதிலும் ஜே.ஆர். ஜெயவர்தனவின் இராஜதந்திரம் வெளிப்பட்டது.

இலங்கை இந்திய ஒப்பந்தம் என்பது தமிழ் மக்களின் விடுதலைக்கு மிக முக்கியமானதொன்று. அதில் 10 ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தங்கள் நிறைவேற்றப்பட்டால் அது தமிழீழம்என்றவொருஎல்லைக்கோட்டை நிர்ணயிக்கும்என்றகாரணத்தால்பௌத்த துறவிகள் சகிதம் அதனை எதிர்த்தனர். தொடர்ந்தும் திம்பு முதல் டோக்கியோ வரையிலான விடுதலைப்புலிகளுடனான பேச்சு வார்த்தைகளாக 7 சர்வதேச பேச்சு வார்த்தைகளும் 14 உள்ளூர் பேச்சு வார்த்தைகளும் இடம்பெற்றிருந்தன. இந்த பேச்சு வார்த்தைகளையும் இது பௌத்த நாடு என்ற தோரணையில் இந்த பௌத்த துறவிகளே குழப்பத்தை ஏற்படுத்தினர். தொடர்ந்தும் இவர்களே மகிந்த ராஜபக்ச கோட்டபாய ராஜபக்ச இருவரையும் குழப்புகின்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் குழப்புகின்ற குழப்பங்களை பார்க்கும் பொழுது தமிழ் மக்களுக்கு ஏதேனும் நன்மைகள் உண்டா என்றால் இல்லை.

ஆகவே நாம் ஓரத்தில் நின்று வேடிக்கை பார்க்கின்றவர்களாக எமது அரசியல் செயற்பாடுகளை காய் நகர்த்த வேண்டும். இந்த பௌத்த துறவிகளின் அரசியலை முதலில் இந்த நாட்டிலிருந்து அப்புறப்படுத்த வேண்டும். அவ்வாறு அப்புறப்படுத்துவதன் ஊடாகவே இந்த நாட்டை ஒரு மதவாதமற்ற நாடாக மாற்றியமைக்க முடியும். தற்பொழுது பாராளுமன்றத்திலும் அவர்களின் ஆட்சியதிகாரத்தை கொண்டு வருவதற்கான முயற்சிகளை பௌத்த துறவிகள் மேற்கொண்டுவருகின்றனர்.

ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்சவை வைத்து இந்த நாட்டை ஒரு பௌத்த நாடாக தொடர்ந்தும் முன்னெடுக்க முடியும் என்ற நிலைப்பாட்டை இந்த பௌத்த துறவிகள் கொண்டிருந்த போதிலும் சீன நாட்டிற்கு இந்த நாட்டின் பல இடங்களை தாரை வார்த்து கொடுத்தமையினால் ராஜபக்ச குடும்பத்தின் மீது கொண்டிருந்த நம்பிக்கையும் இந்த பௌத்த துறவிகள் இழந்துபோயினர். இதன் காரணமாக மீண்டும் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்சவை வைத்து இந்த நாட்டை கட்டியெழுப்ப முடியாது என்பதிலும் அவர்கள் உறுதியாக உள்ளனர்.

ஆகவே ஆட்சி மாற்றம் ஒன்று இலங்கையில் ஏற்படப்போகின்றது என்பதற்கான சமிஞ்சைகளாகவே சிங்கள இளைஞர்கள் போராட்டங்களை கையில் எடுத்துள்ளனர். சீனக்காலணியாக இலங்கை மாற்றம் பெறும் என்ற காரணத்திற்காகவே பௌத்த துறவிகளின் கோபத்திற்குள்ளான ஜனாதிபதியும் பிரதமரும் இந்த நாட்டை கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளை பொருளாதார ரீதியில் மேற்கொண்டால் மட்டுமே வருகின்ற ஆபத்தில் இருந்து தப்பித்துக்கொள்ள முடியும் என்பதே இதன் நிலைப்பாடு.





# மாகாண சபைகளின் அதிகாரங்களைப் பிடுங்கி வெற்றுப்பொருளாக்குவதே அரசின் திட்டம் அமைச்சரவைத் தீர்மானங்கள் அம்பலப்படுத்துவதாக சிவசக்தி ஆனந்தன் தெரிவிப்பு!

மாகாண சபைகளின் அதிகாரங்களைப் பிடுங்கி வெற்றுப்பொருளாக்குவதே அரசின் திட்டம் அமைச்சரவைத் தீர்மானங்கள் அம்பலப்படுத்துவதாக சிவசக்தி ஆனந்தன் தெரிவிப்பு

உயிர்த்தியாகங்களினால் உருவான மாகாண சபைகளுக்கான காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதற்கு மறுதலித்து வரும் சிங்கள, பேரினவாத அரசுகள் தற்போது மருத்துவம் மற்றும் கல்வி அதிகாரங்களையும் பறிப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் செயலாளர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார்.

ஒட்டுமொத்தமாக மாகாண சபைகளை அதிகாரங்கள் அற்ற வெற்றுப்பொருட்களாக்குவதையே இலக்காக கொண்டவை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். கடந்த அமைச்சரவைக் கூட்டத்தின் போது கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு மாவட்ட பொது மருத்துவமனைகள் உட்பட ஒன்பது மருத்துவ மனைகளை மத்திய சுகாதார அமைச்சின் கீழ் கொண்டுவருவதற்கு அனுமதி அளிக்கும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

தமிழன விடுதலைக்காக ஆயுதமேந்திப் போராடிய இளைஞர், யுவதிகளின் உயிர்த்தியாகத்தினால் உருவானது தான் இந்திய இலங்கை ஒப்பந்தமும் அதன் பிரகாரம் இலங்கை அரசியலமைப்பில் மேற்கொள்ளப்பட்ட 13ஆவது திருத்தமும் ஆகும். அதன் மூலம் தான் மாகாண சபைகள் ஸ்தாபிக்கப்பட்டன. இதில் வடக்கு கிழக்கில் பூர்வீகமாக வாழும் தமிழ் மக்களுக்காக இணைந்த வடகிழக்கு மாகாண சபை உருவாக்கப்பட்டிருந்தது என்பதே வரலாறு.

இந்த நிலையில் ஆரம்பத்தில் வடக்கு கிழக்கு மாகாண சபை பிரிக்கப்பட்டது. அதன் பின்னர் மாகாண சபைகளுக்கு காணப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம் காணி, பொலிஸ் ஆகியவற்றை வழங்குவதற்கு மத்தியில் மாறி மாறி ஆட்சியில் இருந்த அத்தனை சிங்கள பேரினவாத அரசாங்கங்களும் மறுத்தன.

காணி, பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்பட்டால் தனிநாடு உருவாகும் என்றும், அது இலங்கைத் தேசிய பாதுகாப்புக்கு கேடாகிவிடும் என்றும் சிங்களத் தலைவர்கள் கருத்துக்களை வெளிப்படுத்தினார்கள்.

இவ்விதமான நிலைமை தற்போதைய ஆட்சியாளர்கள் பதவிக்கு வந்ததும் மேலும் மோசமடைந்தது. ஒரேநாடு ஒரே சட்டம் என்ற சித்தாந்தத்தினை அமுலாக்கி13ஆவது திருத்தச்சட்டத்தினை முழுமையாக துடைத்தெறிவதற்கு கங்கணங்கட்டிக்கொண்டிருக்கின்றனர்.

ஆனாலும், பிராந்திய தலைமை நாடு உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் நெருக்கடியால் அதனை உடனடியாக தற்போதைய ஆட்சியாளர்களால் மேற்கொள்ள முடிந்திருக்கவில்லை. இதனால் தான் 13ஆவது திருத்தச்சட்டத்தினை காலவதியாகியசட்டமென்று விமர்சனம் செய்ய ஆரம்பித்துள்ளனர். அதில் ஆக்கக்குறைந்தது மாற்றங்களை ஏற்படுத்தி வலுவிழந்தவொன்றாக உருவாக்கி விடுவதற்கும் முனைப்புடன் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

இதனால் தான் தற்போது மாகாண சபைகளின் அதிகாரத்திற்கு உட்பட்டிருக்கும் மருத்துவ மனைகளை மத்திய அரசாங்கத்தின் கீழ் கொண்டுவருதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், அடுத்துவரும் நாட்களில் பல பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தல் என்ற பெயரில் மத்திய அரசாங்கத்தின் கீழ் கொண்டு வருவதற்கு திரைமறைவு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதற்கு கொரோனா நெருக்கடி, இணைவழிக்கல்வி போன்ற இதர விடயங்களையும் தமக்கான சாதமான நிலைமைகளாக மாற்றிக்கொள்வதற்கு ஆட்சியாளர்கள் முனைந்து கொண்டிருக்கின்றார்கள்.

ஏற்கனவே காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்கவதற்கு மறுத்துவரும் ஆட்சியாளர்கள் சுகாதாரம், கல்வி ஆகிய விடயங்களில் மாகாண சபைகளுக்கான அதிகாரங்களையும் பிடுங்கி விட்டால் மாகாண சபைகள் அனைத்து வெற்றுப்பொருட்களாகி விடும்.

அதன் பின்னர் மாகாண சபைகளினால் எவ்விதமான பயன்களும் ஏற்படப்போவதில்லை. அவ்வாறு ஏற்படுவதற்கு வாய்ப்புக்கள் ஏற்பட்டாலும் ஆளுநர் உள்ளிட்ட அரச தரப்பினரை வைத்து சமாளித்து விடலாம் என்றே கருகின்றது.

இதனால், தான் மூன்று ஆண்டுகளுக்கு அதிகமான காலம் கடந்துள்ள போதும் மாகாண சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படாது இழுத்தடிக்கப்படுகின்றது.

இவ்வாறான நிலையில் புதிய அரசியலமைப்புக்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இத்தகைய பின்னியில் மாகாண சபைகள் எவ்விதமான அதிகாரங்களையும் பயன்படுத்தாது இருக்கின்ற போது, அதனால் எவ்விதமான பயனுமில்லை என்று கூறி முழுமையாக 13ஆவது திருத்தச்சட்டத்தினை அகற்றுவதே திட்டமாக உள்ளது.

எனவே இந்த விடயத்தில் பங்கு தாரர்களாக இருக்கும் மக்கள் பிரதிநிதிகள், சிவில் தலைவர்கள், மதத்தலைவர்கள் என்று அனைவரையும் உள்ளடக்கிய முறையான பொறிமுறையொன்றை முன்னெடுப்பதே சிறந்ததாகும் என்றுள்ளது.

# முஸ்லிம்ங்களின் தயார்ப்படுத்தலில் மற்றுமொரு குண்டுத்தாக்குதல் நடத்தப்படலாம்

ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்சவின் அரசாங்கம் என்பது சீன அரசாங்கத்தின் இராஜதந்திர கொள்கைகளை அடிப்படையாக கொண்டு செயற்பட்டுவருகின்றது. அது எவ்வளவு தூரம் என்றால் ஒரு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் விபரீதங்களை ஏற்படுத்தக்கூடிய நடைமுறைகளை குறிப்பாக அபிவிருத்தியடைந்த நாடுகள் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளை குறிவைத்து கலவரங்களை உருவாக்குவது இயல்பானது அதிலும் குறிப்பாக இஸ்ரேலை பொறுத்தவரையில் மொஷாட் என்ற புலனாய்வு கட்டமைப்பானது உலகிலேயே பிரசித்தி பெற்ற புலனாய்வு கட்டமைப்பாகும்.

கடந்தகால அரசாங்கங்கள் எல்லாம் தமிழீழ விடுதலைப்புலிகளுடனான போர் உச்சகட்டத்தை அடைந்த நிலையில் இஸ்ரேலின் ஆதரவை பெற்றே தமது செயல் நடவடிக்கைகளை நிறைவேற்றிவந்தார்கள். அதிலும் குறிப்பாக போரியல் ரீதியாகவே இடம்பெற்றது.

இலங்கை முஸ்லிங்களை பொறுத்தவரையில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான போர் உச்சகட்டமடைந்த நிலையிலும் அல்லது போர் மலுங்கடிக்கப்பட்ட வரையிலும் தமதுகாட்டிக்கொடுப்புக்களைஇராஜதந்திர ரீதியில் நகர்த்தி வந்தனர். ஈழப்போரின் இறுதிக்கட்டத்தில் மாவிலாறு தொடக்கம் முள்ளிவாய்க்கால் வரை 1 இலட்சத்து 40 ஆயிரம் பேர் கொலை செய்யப்பட்ட போதிலும் முஸ்லிங்கள் தமிழ் பேசும் மக்களாக இருந்தும் அப்பாவி மக்கள் கொலை செய்யப்பட்ட பொழுது குரல் எழுப்பப்படவில்லை. மாறாக பாற்சோறு பொங்கி குதூகலித்தார்கள்.

அதன் பின்னர் தமிழ் பேசும் மக்களாகிய முஸ்லிம், பரங்கியர், தமிழர் இவர்கள் தவிர்த்து ஒரு கூட்டரசாங்கத்தை ஏற்படுத்தாது தனிச்சிங்கள வாக்குகளால் இலங்கை அரசு வெற்றி பெறுவதாக இருந்தால் அதனை எப்படி சாத்தியமாக்குவது? என்பதற்கு விடை காணவே திட்டமிட்ட வகையில் முஸ்லிங்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையிலான நிரந்தர பகைமையை உருவாக்குவதுடன் அதனூடாக இலங்கை அரசானது இலங்கை திருநாட்டை சிங்களே என்று பெயர் மாற்றிக்கொள்வதற்கும் உறுதுணையாய் அமைகின்றதே இவர்களுடைய நிலைப்பாடு என்றவொரு காரணத்தினால் தமிழர்கள் செறிந்து வாழுகின்ற மட்டக்களப்பு, நீர்கொழும்பு, கொச்சிக்கடை போன்ற தேவாலயங்கள் மீது மிலேச்சத்தனமான குண்டுத்தாக்குதல் முஸ்லிம் தீவிரவாதிகளால் முன்வைக்கப்பட்டது.

இதில் குறிப்பாக 21முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் சஹ்ரானுடன் ஏதோவொரு வகையில் தொடர்பு இருப்பது குற்றப்புலனாய்வாளர்களால் கண்டு பிடிக்கப்பட்டதொன்று. சஹ்ரானுடன் நெருங்கிய தொடர்புடைய முன்னாள் அமைச்சரும் ஆளுநருமான எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா கைது செய்யப்படவுமில்லை



விசாரிக்கப்படவுமில்லை. இவருடைய முறைப்பாடுகளில் நான் ஒரு ஆயுத குழுவை வைத்திருந்தேன் என்று கூட ஒப்புதல் வாக்கு மூலம் ஒன்றை ஊடகங்கள் வாயிலாக தெரிவித்திருந்தார். இந்துக்கோவிலை உடைத்து பள்ளிவாசலை கட்டினேன் என்றும் எல்லைகளில் நின்று எமது கிராமத்தை காப்பாற்றுவேன் என்றும் குறிப்பிட்டிருந்தார். அதை விடவும் மட்டக்களப்பு ஒட்டமாவடியில் 1400 பில்லியன் ரூபாய் செலவில் திறந்த பல்கலைக்கழகம் ஒன்றையும் நிறுவியுள்ளார். இவருடைய செயற்பாடு குறித்தும் அக்கறை கொள்ளாத இலங்கை அரசு முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியூதின் மீது குற்றச்சாட்டுக்களை சுமத்தி சஹ்ரான் குண்டுத்தாக்குதலிலும் தொடர்பு இருப்பதாக சந்தேகித்து பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதும் இடம்பெற்றிருக்கின்றது. இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை. இவை ஒருபுறமிருக்க மீண்டும் அரசாங்கம் ஒரு பாரிய சரிவை இந்த கொரோனா வைரஸ் காரணமாக சந்தித்துள்ளது. 3 மாதங்களே மத்திய வங்கியின் கையிருப்பு போதுமானது என்கின்றார் அதன் இயக்குனர். அப்படியாக இருக்கும் பொழுது கொரோனா வைரஸினுடைய தாக்கத்தின் வீரியம் என்றுமில்லாதவாறு அதிகரித்துள்ள நிலையிலே கடன் சுமையில் இலங்கை அரசு தள்ளப்பட்டுள்ளது.

சீனா பங்களாதேஷ் போன்ற நாடுகளிடம் இருந்தும் பல மில்லியன் டொலர்களை கடனாக பெற்றுள்ளது. இதனை திருப்பி கொடுப்பது எப்படி? நாட்டின் வளங்களை கட்டியெழுப்புவது எப்படி என்றெல்லாம் சிந்திக்க வேண்டியுள்ளது. சர்வதேச நாடுகளை பகைத்துக்கொள்வதன் நிமித்தம் GSP + வரிச்சலுகைகளை இந்த அரசாங்கம் இழந்து நிற்கின்றது. இது தொடர்ந்தும் ஒரு ஆபத்தான சூழலையே இந்த நாட்டில் ஏற்படுத்தும்.

வடகிழக்கிணைந்த தமிழர் தாயகம் இதனை ஒருபோதும் இலங்கை அரசு பேச்சுவார்த்தைகள் மூலம் வழங்கப்போவதில்லை. அதன் ஒரு கட்டமாகவே ஆயுத போராட்டம் இந்த நாட்டில் இடம்பெற்றது காலத்துக்கு காலம் மாறி மாறி வந்த அரசாங்கங்கள் ஒவ்வொன்றும் தமிழினத்தின் மீது அழுத்தங்களையே பிரயோகித்து வந்தார்கள். இனப்பிரச்சனை காலத்தீர்வினை சர்வதேச நாடுகளின் துணை கொண்டு அதனை நிறுத்துவதற்கு இலங்கை அரசாங்கம் அதற்கான பொறிமுறைகளில் இருந்து விலகிச்சென்றதே வரலாறு. தற்பொழுது சீன அரசாங்கத்திற்கு இந்த நாட்டை தாரை வார்த்ததன் ஊடாக தொடர்ந்தும் இந்த நாடு பாரிய அழிவுகளை சந்திக்க சர்வதேசரீதியாக நேரிடும். இதற்கெல்லாம் இலகுவாக முஸ்லிம் இனத்தை மீண்டும் தூண்டிவிட்டு பிரிவினையை உருவாக்கி இந்த நாட்டை ஒரு போர்க்களம் நிறைந்த நாடாக மாற்றுவதற்கான சதித்திட்டங்கள் திரைமறைவில் இடம்பெற்றுவருகின்றது.

கடந்தகால போர் வரலாறு என்பது ஒரு இரத்த பூமியாக ஒரு, சுடுகாடாக காட்சியளித்த சர்வதேச ரீதியில் அணுகுமுறைகளை ஏற்படுத்திக்கொண்டாலும் சர்வதேச நாடுகள் ஒவ்வொன்றும் தமது சுயலாப அரசியலை கருத்திற்கொண்டு செயற்பட்டதே தவிர தமிழினத்தின் மீது அக்கறையுடன் செயற்படவில்லை. அவ்வாறுசெயற்பட்டிருந்தால்இந்தநாட்டில் முஸ்லிங்கள் தமிழர்களுக்கு எதிராகவும் பின்னர் ஒரு தீவிரவாதிகளாகவும் செயற்பட்டிருக்க வாய்ப்புக்கள் இல்லை. ஒரு சில முஸ்லிங்களை அடிமாடுகளாக அரசாங்கம் வளர்த்து வருகின்றது. இவர்கள் கூலிக்காக மாறடிக்கின்ற ஒரு கூட்டம். இவர்களுடைய செயற்பாடுகளையும் அரசாங்கத்தினுடைய புலனாய்வாளர்கள் பலதடவை சொல்லியும் அதனை செவிமடுக்காத கடந்தகால அரசாங்கம் அப்பொழுது ஆட்சியிலிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கோட்டை விட்டுவிட்டார்.

தமிழினத்தின் மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருந்த வன்முறைகள் சர்வதேச ரீதியாக பாரிய விபரீதங்களை தோற்றுவித்த போதிலும் இலங்கை அரசாங்கமானது இலங்கையில் இனப்படுகொலை இடம்பெறவில்லை என்றும் இடம்பெற்றது உள்ளூர் யுத்தம் என்றும் அது பயங்கரவாதிகளுடனேயே இடம்பெற்றது என்றும் தற்பொழுது கூறி வருகின்றனர். நியாயபூர்வமற்ற கருத்துக்களை வெளியிட்டுவருகின்ற அரசாங்கம் தமது அரசாங்கத்தை தக்கவைத்துக்கொள்வதற்காகவே ஒரு தற்கொலை குண்டுத்தாக்குதலை இந்த நாட்டில் நடத்திக்காட்டியது. முஸ்லிம் சார்ந்தவர்கள் நூற்றுக்கணக்கானோர் இராணுவ புலனாய்வாளர்களும் TID, CID, NIB போன்றவற்றில் செயற்பட்டு வருகின்றார்கள். இவர்களுக்கு தெரியாமலும் இந்த குண்டுத்தாக்குதல் இடம்பெறுவதற்கு வாய்ப்புக்கள் இல்லை. இவ்வாறான குண்டுத்தாக்குதல்கள் இடம்பெறப்போவதாக இந்தியா முன்னரே அறிவித்திருந்தது. அதை ஒரு வேடிக்கையாக இலங்கை அரசாங்கம் கருதியது. அதன் விளைவை இன்றும் அறுவடை செய்துகொண்டிருக்கின்றோம்.


ஆகவே முஸ்லிங்கள் மீது தொடர் வன்முறைகளை அரசு தோற்றுவிப்பதனூடாக யானை தனது தலையில் தானே மண்ணை வாரி போட்டது போலவும் தமக்கு தாமே குழி வெட்டுகின்றார்கள். ஆகவே பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கி தீவிரவாத தடைச்சட்டத்தை அமுல்படுத்துவதனூடாக முஸ்லிம் தீவிரவாதிகளை இந்த நாட்டிலிருந்து அப்புறப்படுத்த முடியும்.

ஒரு இனத்தின் விடுதலைக்காக போராடிய தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனையும் தமிழினத்தையும் பயங்கரவாதிகள் என முத்திரை குத்திய இலங்கை அரசு விடுதலைப்புலிகளுடனான போராட்டமானது இந்த நாட்டிற்கு ஏன் அவசியம் என்று தற்பொழுது சிந்தித்து வருகின்றது. ஆகவே இந்த நாட்டில் மற்றுமொரு குண்டுத்தாக்குதல் ஏற்படுத்தாத வகையில் முஸ்லிம் தீவிரவாதத்தை முஸ்லிம் மக்களிடமிருந்து வேறு பிரிப்பதும் என்பதே காலத்தின் தேவை.

**நெற்றிபொறியன்**



# பிராந்தியச் செய்திகள்



## மட்டக்களப்பில் உயிரிழந்த நிலையில் 3 கடல் ஆமைகள் மற்றும் டொல்பின் மீன் கரையொதுங்கியுள்ளன

மட்டக்களப்பு- கிரான்குளம் கடற்கரையில் உயிரிழந்த நிலையில் 3 கடல் ஆமைகள் மற்றும் ஒரு டொல்பின் மீன் ஆகியன அன்று (சனிக்கிழமை) கரையொதிங்கியுள்ளன.

குறித்த பகுதியில் மேலும் பல ஆமைகள் அடைந்து வருவதாகவும் கடல் தொழிலுக்கு சென்று திரும்பிய மீனவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.



மேலும் சம்பவம் அறிந்து அவ்விடத்திற்கு வருகை தந்த கடற்றொழில் நீரியல்வள திணைக்கள அதிகாரிகள், கடல் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் உத்தியோகத்தர்கள், மத்திய சுற்றாடல் அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் உட்பட்ட அதிகாரிகள் பார்வையிட்டுள்ளனர்.

இந்நிலையில் கரையொதுங்கிய டொல்பின் மற்றும் கடலாமைகள் ஆகியவற்றை பகுப்பாய்விற்காக வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் கொண்டுசென்றுள்ளனர்.

அண்மைக்காலமாக இதுவரை 40க்கும் மேற்பட்ட கடலாமைகளின் உடல்களும் 5 டொல்பின்களின் உடல்களும் இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் கரையொதுங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து வெளிநாடு செல்ல முயன்ற மாங்குளம் பெண் கைது

பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கை உள்ளிட்ட போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து கட்டார் ஊடாக பிரான்ஸ் செல்ல முற்பட்ட பெண்ணொருவர் குடிவரவு குடியகல்வு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.



மாங்குளம் பகுதியைச் சேர்ந்த 25 வயதுடைய பெண்ணே கைது செய்யப்பட்டுள்ளார். குறித்த பெண் கட்டார் நோக்கிப் புறப்பட்ட விமானத்தில் பயணிக்க கட்டுநாயக்க விமான நிலையத்தில் குடிவரவு - குடியகல்வு அதிகாரிகளிடம் தனது ஆவணங்களை ஒப்படைத்துள்ளார்.

அவற்றை அதிகாரிகள் பரிசோதித்த போது, அவை போலியான ஆவணங்கள் என்பதைக் கண்டறிந்து அப்பெண்ணைக் கைது செய்துள்ளனர். குறித்த பெண் சமர்ப்பித்த ஆவணங்களில் பிசி.ஆர். பரிசோதனை ஆவணமும் போலியானது என அதிகாரிகள் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட பெண் தடுத்து வைக்கப்பட்டு மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## கிளிநொச்சியில் தொற்று நீக்கும் பணியை தனிநபர் முன்னெடுப்பு

கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தலில் இருந்து மக்களை பாதுகாக்கும் நோக்குடன் தனிநபர் ஒருவர் தனது சொந்த முயற்சியால் தொற்று நீக்கும் பணியினை முன்னெடுத்திருந்தார்.

கிளிநொச்சி- கண்டாவளை, தருமபுரம் பகுதியில் மக்கள் அதிகம் நடமாடும் பொது இடங்கள் மற்றும் பொலிஸ் நிலையம், இராணுவ சோதனைச் சாவடி உள்ளிட்ட பகுதிகளில் தொற்று நீக்கும் செயல்பாட்டினை அவர் அன்று (வெள்ளிக்கிழமை) முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கது.



## யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 56 பேர் உட்பட வடக்கில் 76 பேருக்கு தொற்று

வடக்கு மாகாணத்தில் நேற்று 76 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. யாழ். பல்கலைக்கழகம், யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வு கூடங்களில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனைகளில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.



இவர்களில் 56 பேர் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்களாவர். இதேவேளை,கிளிநொச்சிமாவட்டத்தில் 03 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 07 பேரும், வவுனியா மாவட்டத்தில் 06 பேரும், மன்னார் மாவட்டத்தில் 04 பேரும் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

## யாழில் அனுமதியின்றி டிரக்டரில் மணல் ஏற்றிச் சென்றவர் கைது

பயணக் கட்டுப்பாடு அமுலிலுள்ள நேரத்தில் அனுமதிப் பத்திரமின்றி டிரக்டரில் மணல் ஏற்றிச் சென்ற ஒருவர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கொக்குவில்-குளப்பிட்டி சந்தியருகே அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றி வந்தவரையே பொலிஸார் கைது செய்துள்ளனர். இந்நிலையில், மணல் ஏற்றி வந்த டிரக்டர் பொலிஸாரால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்பட்ட அதேவேளை சந்தேக நபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## இரத்தாகும் இலகு ரயில் திட்டத்திற்காக 5,896 மில்லியன் ரூபாவை இலங்கை செலுத்த வேண்டியுள்ளதாக தகவல்

ஜப்பானின் நிவாரணக் கடனின் கீழ் கடந்த அரசாங்கம் செயற்படுத்த முயன்ற இலகு ரயில் திட்டத்தை இரத்து செய்வதற்கு தற்போதைய அரசாங்கம் தீர்மானித்தாலும் 5,896 மில்லியன் ரூபாவை செலுத்த வேண்டியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த வருடத்தின் அரசாங்கத்தின் நிதி கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பிலான கணக்காய்வாளரின் அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

5,896 மில்லியன் ரூபாவை இலகு ரயில் திட்டத்தின் ஆலோசனை சேவைக்கு வழங்க வேண்டியுள்ளதாக கணக்காய்வாளர் தெரிவித்துள்ளார்.

எனினும், இந்தத் தொகை கடந்த வருடம் அரசாங்கத்தின் நிதி கொடுக்கல் வாங்கல் பதிவுகளில் உள்வாங்கப்படவில்லையெனவும் கணக்காய்வாளர் நாயகம் சுட்டிக்காட்டியுள்ளார்.

## டெல்டா பிறழ்வு பரவுவதை தடுக்க நடவடிக்கை

இந்தியாவில் அடையாளம் காணப்பட்ட கொரோனா வைரஸின் டெல்டா பிறழ்வினால் பாதிக்கப்பட்டோர் சமூகத்தில் உள்ளனரா என்பதை கண்டறிவதற்காக, நாட்டின் பல பாகங்களிலும் மாதிரிகள் சேகரிக்கப்படவுள்ளன.

பல்வேறு இடங்களிலுள்ள தனிமைப்படுத்தல் நிலையங்களிலிருந்து மாதிரிகள் சேகரிக்கப்பட்டதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.



வெளிநாடுகளிலிருந்து நாட்டிற்கு திரும்பியோர் தங்கியுள்ள தனிமைப்படுத்தல் நிலையங்களிலும் மாதிரிகள் பெறப்பட்டுள்ளன.

சேகரிக்கப்பட்ட மாதிரிகள், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திற்கு அனுப்பப்பட்டு பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளதாகவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் கூறியுள்ளார்.

புதிய வைரஸ் தொற்றுடன் தெமட்டகொடை - ஆராம பகுதியில் அடையாளம் காணப்பட்ட ஐவருடன் தொடர்புகளை பேணியோரை அடையாளங்காணும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.




## மீண்டும் வெப் தொடரில் நடிப்பது உண்மையா? நடிகை சமந்தா தரப்பு விளக்கம்

நடிகை சமந்தா மீண்டும் ஒரு வெப் தொடரில் நடிக்க உள்ளதாக தகவல் பரவி வந்த நிலையில், அதுகுறித்து அவர் தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

தமிழ், தெலுங்கில் முன்னணி நடிகையாக வலம்வரும் சமந்தா, திருமணத்துக்கு பின்னரும் படங்களில் பிசியாக நடித்து வருகிறார். இவர் கைவசம் 'காத்துவாக்குல ரெண்டு காதல்', 'சகுந்தலம்' போன்ற படங்கள் உள்ளன.

இதனிடையே, நடிகை சமந்தா நடிப்பில் அண்மையில் வெளியான, 'தி பேமிலி மேன் 2' வெப் தொடர், பல்வேறு சர்ச்சைகளில் சிக்கினாலும், நல்ல வரவேற்பை பெற்றது. இதனால் நடிகை சமந்தா மீண்டும் ஒரு வெப் தொடரில் நடிக்க சம்மதம் தெரிவித்ததாகவும், இதற்காக அவருக்கு ரூ.8 கோடி சம்பளம் பேசப்பட்டுள்ளதாகவும் தகவல் பரவியது.

இந்நிலையில், நடிகை சமந்தா தரப்பு இதனை திட்டவட்டமாக மறுத்துள்ளது. அவர் மீண்டும் வெப் தொடரில் நடிக்க உள்ளதாக பரவி வரும் தகவல் உண்மையில்லை, அது வெறும் வதந்தி எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அவர் தற்போதைக்கு படங்களில் நடிக்க கவனம் செலுத்தி வருவதாக சமந்தாவின் நெருங்கிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.



## இறுக்கமான உடையில் போஸ் கொடுத்த நடிகை கீர்த்தி சுரேஷ்



தமிழ், தெலுங்கு, மலையாளம் என தென்னிந்திய மொழிகளில் முன்னணி கதாநாயகியாக விளங்கி வருகிறார் நடிகை கீர்த்தி சுரேஷ்.

இவர் நடிப்பில் தற்போது அண்ணாத்த மற்றும் சாணி காயிதம் உள்ளிட்ட படங்கள் தமிழில் உருவாகி வருகிறது.

மேலும் மலையாளத்தில் மோகன்லாலுடன் இணைந்து கீர்த்தி சுரேஷ் மற்றும் பலர் நடித்துள்ள மரைக்காயர் படம் எப்போது வெளியாகும் என்று தான் எதிர்பார்த்து காத்துகொண்டு இருக்கிறார்கள் ரசிகர்கள்.

நடிகை கீர்த்தி சுரேஷின் புகைப்படங்கள், அவ்வப்போது சமூக வலைத்தளத்தில் வெளியாகி, ரசிகர்கள் கவர்ந்து வரும்.

அந்த வகையில் தற்போது பிங்க் நிறத்தில், இறுக்கமான உடை அணிந்து நடிகை கீர்த்தி சுரேஷ் போஸ் கொடுத்துள்ள புகைப்படம் தற்போது வெளியாகியுள்ளது.

## தொகுப்பாளராக களமிறங்கும் சிம்பு?



தமிழ் திரையுலகில் முன்னணி நடிகராக வலம்வரும் சிம்பு, விரைவில் தொகுப்பாளராக களமிறங்க உள்ளதாக கூறப்படுகிறது.

நடிகர் சிம்பு, உடல் எடையை குறைத்த பின்னர் படங்களில் பிசியாக நடித்து வருகிறார். இவர் கைவசம் மாநாடு, பத்து தல, மஹா, நதிகளிலே நீராடும் சூரியன் போன்ற படங்கள் உள்ளன.

இந்நிலையில், நடிகர் சிம்பு விரைவில் தொகுப்பாளராக களமிறங்க உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. அதன்படி சர்வதேச அளவில் பிரபலமான 'சர்வைவர்' நிகழ்ச்சியின் தமிழ் பதிப்பை சிம்பு தொகுத்து வழங்க உள்ளதாக கூறப்படுகிறது.

இந்த நிகழ்ச்சியின் விதிப்படி, ஆளில்லாத தனித்தீவில் போட்டியாளர்களை தங்க வைத்து, அவர்களுக்கு விதவிதமான டாஸ்க்குகள் கொடுக்கப்படும். அவை அனைத்தையும் வெற்றிகரமாக கடந்து இறுதிவரை தாக்குப்பிடிக்கும் போட்டியாளரே வெற்றியாளராக அறிவிக்கப்படுவார். இதில் வெற்றி பெறுபவருக்கு பெரும் பரிசுத் தொகையும் வழங்கப்படும்.

ஏற்கனவே நடிகர் கமல் 'பிக்பாஸ்' நிகழ்ச்சியையும், நடிகர் விஜய் சேதுபதி மாஸ்டர் செப் நிகழ்ச்சியையும் தொகுத்து வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

## ரசிகர்கள் எதிர்பார்த்த டெடி 2 படம் உருவாகிறதா?

நடிகர் ஆர்யா மற்றும் அவரது மனைவி நடிகை சாயிஷா நடிப்பில் உருவாகி, நேரடியாக ஓடிடியில் வெளியான படம் டெடி.

சக்தி சவுந்தரராஜன் இயக்கியிருந்த இப்படத்தை ஸ்டூடியோ கிரீன் நிறுவனம் தயாரித்திருந்தது.

இப்படத்தில் இடம்பெறும் டெடி என்கிற பொம்மை கதாபாத்திரம் குழந்தைகள் ரசிக்கும் விதமாக அமைக்கப்பட்டிருந்ததால் இப்படத்திற்கு குழந்தைகள் மத்தியில் அமோக வரவேற்பு கிடைத்தது.

இந்நிலையில் விரைவில் டெடி படத்தின் 2ஆம் பாகம் உருவாக உள்ளதாக நடிகர் ஆர்யா சமீபத்தில் தெரிவித்துள்ளார்.

ஆம், இயக்குனர் சக்தி சவுந்தரராஜன் டெடி இரண்டாம் பாகத்துக்கான ஆரம்பக்கட்ட பணிகளில் ஈடுபட்டுள்ளாராம்.

மேலும் கூடியவிரைவில் இப்படத்தில் நடிக்க ஆவலோடு இருப்பதாகவும் ஆர்யா கூறியுள்ளார். இந்த தகவல் டெடி படத்தின் ரசிகர்களுக்கு ஒரு விருந்தாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.



தொகுப்பு :– ஹாசினி




# முடி கொட்டுவதை தடுக்கும் சில வீட்டு வைத்தியங்கள்

ஆண்கள் மற்றும் பெண்கள் என இருவருமே சந்திக்கும் மிகவும் பொதுவான பிரச்சனை தான் தலைமுடி உதிர்வு. தலைமுடி பிரச்சனைகளானது நாம் உண்ணும் உணவு, வாழ்க்கை முறை மற்றும் பிற ஆரோக்கிய பிரச்சனைகளுடன் நேரடி தொடர்புடையவை. மேலும் இது ஒருவர் அதிக மன அழுத்தத்தில் இருப்பதன் அறிகுறியாகவும் இருக்கலாம். தலைமுடி உதிர்வதைத் தடுக்கும் சில எளிய வீட்டு வைத்தியங்களை கீழே கொடுத்துள்ளது. இந்த வைத்தியங்களை பின்பற்றினால், தலைமுடி கொட்டும் பிரச்சனையில் இருந்து விடுபடலாம்.

தேங்காய் எண்ணெய்:- தேங்காய் எண்ணெயில் உள்ள பொட்டாசியம் மற்றும் இரும்புச்சத்து, தலைமுடியின் வளர்ச்சிக்கு உதவுவதோடு, தலைமுடி உதிர்வதையும் குறைக்கும். அதற்கு தேங்காய் எண்ணெயை வெதுவெதுப்பாக சூடேற்றி தலையில் தடவி சிறிது நேரம் மசாஜ் செய்ய வேண்டும். பின் ஒரு மணிநேரம் கழித்தோ அல்லது ஒரு இரவு முழுவதும் ஊற வைத்த பின்போ தலைமுடியை அலசலாம்.

வெங்காய சாறு:- வெங்காய சாற்றினை தலைச்சருமம் மற்றும் தலைமுடியில் தடவினால், அதில் உள்ள வளமான அளவிலான சல்பர் தலைமுடியின் வளர்ச்சிக்கு உதவும். அதற்கு வெங்காய சாற்றினை தலையில் தடவி நன்கு ஒரு மணிநேரம் ஊற வைத்து, பின் மைல்டு ஷாம்பு பயன்படுத்தி அலச வேண்டும். இன்னும் சிறப்பான பலன் கிடைக்க வெங்காய சாறுடன் தேனை சேர்த்துக் கொள்ளலாம்.

முட்டை:- முட்டையில் சல்பர், அயோடின், ஜிங்க், புரோட்டீன் மற்றும் பாஸ்பரஸ் போன்ற அற்புதமான பொருட்கள் உள்ளன. இவை தலைமுடி உதிர்வதைத் தடுக்க உதவும். அதற்கு ஒரு முட்டையை பௌலில் உடைத்து ஊற்றி, அத்துடன் ஆலிவ் ஆயில் சேர்த்து நன்கு கலந்து, தலையில் தடவி 20 நிமிடம் ஊற வைத்து, பின் மைல்டு ஷாம்பு பயன்படுத்தி தலைமுடியை அலச வேண்டும்.

நெல்லிக்காய்:- வைட்டமின் சி மற்றும் பிற ஆன்டி-ஆக்சிடன்ட்டுகள் அதிகம் நிறைந்த நெல்லிக்காய், தலைமுடியின் ஆரோக்கியத்திற்கும் நல்லது. அதற்கு நெல்லிக்காயை தினமும் ஒன்று சாப்பிடுவது மட்டுமல்லாமல், நெல்லிக்காய் சாற்றுடன், எலுமிச்சை சாற்றினை சேர்த்து கலந்து, தலையில் தடவி நன்கு காய்ந்த பின், வெதுவெதுப்பான நீரால் தலைமுடியை அலச வேண்டும்.

கற்றாழை:- கற்றாழை தலைமுடி உதிர்வதைத் தடுப்பதோடு, தலைமுடியின் வளர்ச்சியையும் ஊக்குவிக்கும். அதற்கு கற்றாழையின் ஜெல்லை எடுத்து, தலைச்சருமம் மற்றும் முடியில் தடவி குறைந்தது 45 நிமிடம் ஊற வைத்து, பின் நீரால் தலைமுடியை அலச வேண்டும். இப்படி வாரத்திற்கு 3-4 முறை செய்து வந்தால், நல்ல மாற்றத்தைக் காணலாம்.

வெந்தய விதைகள்:- வெந்தயம் தலைமுடி உதிர்வதைத் தடுப்பதோடு, பாதிப்படைந்த மயிர்கால்களை சரிசெய்து, தலைமுடியின் வளர்ச்சிக்கு உதவி புரியும். அதற்கு வெந்தயத்தை இரவு தூங்கும் முன் நீரில் ஊற வைத்து, மறுநாள் காலையில் நன்கு அரைத்து, தலையில் தடவி 30 நிமிடம் ஊற வைத்து, பின் ஷாம்பு எதுவும் பயன்படுத்தாமல் தலைமுடியை அலச வேண்டும். இப்படி வாரத்திற்கு 2 முறை என ஒரு மாதத்திற்கு பின்பற்றி வந்தால், தலைமுடி உதிர்வது கட்டுப்படும்.

தேங்காய் பால்:- தேங்காய் பாலில் உள்ள புரோட்டீன், அத்தியாவசிய கொழுப்புக்கள் தலைமுடி உதிர்வதைக் கட்டுப்படுத்துவதுடன், முடி உடைவதைக் குறைக்கும் மற்றும் முடியின் வளர்ச்சியை ஊக்குவிக்கும். அதற்கு தேங்காயை நீர் ஊற்றி அரைத்து, வடிகட்டி பால் எடுத்து, தலையில் தடவி சிறிது நேரம் மசாஜ் செய்து, 20-30 நிமிடம் கழித்து மைல்டு ஷாம்பு பயன்படுத்தி தலைமுடியை நீரில் அலச வேண்டும். இப்படி வாரத்திற்கு ஒருமுறை செய்து வந்தால், நல்ல பலன் கிடைக்கும்.

பீட்ருட் ஜூஸ்:- பீட்ருட்டில் வைட்டமின் சி, வைட்டமின் பி, பொட்டாசியம், கல்சியம், கார்போஹைட்ரேட், புரோட்டீன், பாஸ்பரஸ் போன்ற தலைமுடியின் ஆரோக்கியத்திற்கு தேவையான அத்தியாவசிய சத்துக்கள் உள்ளன. மேலும் இது தலைமுடி உதிர்வதைக் கட்டுப்படுத்தும் ஒரு அற்புதமான பொருளும் கூட. அதற்கு தினமும் பீட்ருட்டை அன்றாட உணவில் சிறிது சேர்த்துக் கொள்ளலாம். இல்லாவிட்டால் சிறிது பீட்ருட் இலைகளை ஒரு கப் நீரில் போட்டு, நீர் பாதியாக குறையும் வரை நன்கு கொதிக்க வைத்து இறக்கி, பின் அந்த இலையை அரைத்து, அத்துடன் ஹென்னா பவுடரை சேர்த்து, தலையில் தடவி 20 நிமிடம் ஊற வைத்து, பின் நீரால் தலைமுடியை அலச வேண்டும். இப்படி வாரத்திற்கு 3 முறை செய்து வந்தால், தலைமுடி உதிர்வது கட்டுப்படும் மற்றும் தலைமுடியும் ஆரோக்கியமாக இருக்கும்.



# பெண்களின் அழகை கூட்டும் இயற்கை அழகு குறிப்புகள்....!

முகத்தில் உள்ள முடிகளை அகற்ற, முட்டையின் வெள்ளை கரு, சர்க்கரை, சோளமாவு அனைத்தையும் ஒன்றாகக் கலந்து பசைபோல் ஆனதும் முகத்தில் தடவவும். காய்ந்தவுடன் மெதுவாக பிய்த்து எடுத்தால் முட்டையுடன் முடியும் எளிதில் வரும்.

சருமம் அழகாகவும், பளபளப்பாகவும் மாற கடலை மாவு, மஞ்சள், சந்தனம், அனைத்தையும் கலந்து முகத்தில் தடவி குளித்தால் சருமம் அழகாகவும், பளபளப்பாகவும் மாறும்.

சருமம் நிறம் அதிகரிக்க ஆப்பிள் விழுது இரண்டு டீஸ்பூன், பால்பவுடர் அரை டீஸ்பூன், பார்லி பவுடர் அரை டீஸ்பூன் மூன்றையும் கலந்து முகத்தில் போட்டு அரை மணி நேரம் கழித்து கழுவினால் முகம் மின்னல் போல மின்னும்.

கண்கள் பிரகாசமாக இருக்க இளம் சூடான ஒரு லிட்டர் நீரில், இரண்டு ஸ்பூன் உப்பைப் போட்டு, கண்களை கழுவுதல் வேண்டும். கருவளையம் நீங்க ஆரஞ்சு பழத்தின் சக்கையை கண்கள் மீது அரைமணி நேரம் வைத்திருந்து குளிர்ந்த நீரில் முகத்தை கழுவினால் கருவளையம் காணாமல் போய்விடும்.

மருதாணி நன்கு சிவக்க மருதாணி போடும் முன் கையில் எலுமிச்சை பழ சாறு தடவி உலர விட்டு பிறகு போட்டால் மருதாணி நன்கு சிவக்கும்.

தக்காளியில் ப்ளீச்சிங் தன்மை உள்ளது. எனவே தக்காளியின் சாற்றினை முகத்தில் தடவி மென்மையாக மசாஜ் செய்து, சிறிது நேரம் ஊற வைத்து, பின் குளிர்ந்த நீரில் முகத்தைக் கழுவ வேண்டும். இப்படி வார இறுதியில் மட்டுமின்றி, தினமும் செய்து வந்தால், முகத்தில் சேரும் அழுக்குகளை உடனே நீக்கலாம்.

தயிரை முகத்தில் தடவி 20 நிமிடம் ஊற வைத்து, பின் நீரில் கழுவ வேண்டும். இப்படி தினமும் செய்து வந்தால், 2 வாரத்தில் உங்கள் முகத்தில் சருமத்தின் நிறத்தை அதிகரிக்க உதவும்.

தக்காளியைப் போன்றே எலுமிச்சையிலும் ப்ளீச்சிங் தன்மை உள்ளது. அந்த எலுமிச்சையின் சாற்றினை படுக்கச் செல்லும் முன், நீருடன் கலந்து முகத்தில் தடவி 10 நிமிடம் கழித்து கழுவ வேண்டும். இப்படி வாரத்திற்கு 3 முறை செய்து வந்தால், சருமத்தின் நிறம் கூடும்.

உருளைக்கிழங்கை அரைத்து அதனை முகத்தில் தடவி 20 நிமிடம் ஊற வைத்து, பின் குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும். வாரம் ஒருமுறை செய்து வந்தால், நல்ல பலனைப் பெறலாம்.

அரை டீ ஸ்பூன் தேனில் ஒரு சிட்டிகை பட்டைப் பொடியை க்லந்து முகத்தில் தடவி ஸ்க்ரப் செய்யுங்கள். பின் முகத்தை கழுவிவிடுங்கள். இப்படி செய்தால் முகத்தின் நிறம் மாறும்.

பப்பாளியை அரைத்து முகத்தில் தடவி 1:2 மணிநேரம் ஊற வைத்து, பின் வெதுவெதுப்பான நீரில் கழுவ வேண்டும். இதனால் அதில் உள்ள ப்ளிச்சிங் தன்மையால், சருமத்தில் உள்ள கரும்புள்ளிகள், இறந்த செல்கள், அழுக்குகள் போன்றவை நீங்கி, முகம் பளிச்சென்று இருக்கும்.

காய்ச்சாத பாலை 1 ஸ்பூன் அளவு எடுத்து அதே அளவு ரோஸ் வாட்டர் கலந்து முகத்தில் தடவுங்கள். காய்ந்ததும் கழுவவும். தினமும் தொடர்ந்து செய்தால் நல்ல பலன் கிடைக்கும்.

தேனுடன் எலுமிச்சை சாறு கலந்து முகத்தில் தடவுங்கள். 10 நிமிடம் கழித்து முகம் கழுவி விடுங்கள். எல்லா சருமத்திற்கும் இது பொருத்தமாக இருக்கும்.



தொகுப்பு :- ஹாசினி

# யாழ்ப்பாணம் மிருசுவில் பகுதியில் பிள்ளையார் சிலை உடைப்பிற்கு, சிவசேனா அமைப்பின் தலைவர் கண்டனம்

**சிவசேனையினுடைய இலங்கைக்கான தலைவராக செயற்படுகின்ற மறவன் மரபு சச்சியானந்தன் ஐயா அவர்களுடனான நேர்காணல்**

கடந்தவார தொடர்ச்சி...

**கேள்வி : தற்போதைய சூழ்நிலையில் அண்மையில் கூட கத்தோலிக்க பாதிரியாரின் சில நடவடிக்கைகளால் குறிப்பாக முள்ளிவாய்க்கால் பிரதேசத்திலும்கூட அந்த கல்வெட்டு அகற்றப்பட்டிருக்கின்றது. ஆகவே கிறிஸ்தவ பாதிரிமார்கள் ஒரு அரசியல் மயமாக்கலுக்குள் செல்லுவதை நீங்கள் சிவசேனையினுடைய தலைவர் என்ற வகையில் அதனை ஏற்றுக்கொள்வீர்களா?**

பதில் : இந்த நாட்டிலுள்ள குடிமகனுக்கு அரசியல்வாதியாக ஒரு பாதிரியாக இருக்கலாம், சுவாமியாக இருக்கலாம், குடிகாரனாக இருக்கலாம், கொலைகாரனாக இருக்கலாம் எந்த நிலையில் இருந்தாலும் அரசியல் உரிமையோடு வேலை செய்வதை யாராலும் தடுக்க முடியாது. கொமரி ஈரான் நாட்டின் தலைவராக இருப்பதை நாங்கள் மறந்துவிட முடியாது. இவற்றிற்கெல்லாம் மதமும் மதம் சார்ந்த அமைப்புக்களும் நாட்டின் அரசியலில் தலையிடுவது பெரிய செய்தியல்ல. ஆனாலும் இன்னுமொரு மதத்தை தாக்குவதற்காக இன்னுமொரு நம்பிக்கையுடையவர்கள் மீது வன்முறையை கட்டவிழ்த்துவிடுவதற்காக போத்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் மரபானது தொடர்ச்சியான மரபு. ஆங்கிலேயர் காலத்திலே நாங்கள் வன்முறைக்குள்ளானோம்.

ஒல்லாந்தர் காலத்தில் கிறிஸ்தவ வன்முறைக்குள்ளானோம். சுவாமி ஞான பிரகாசர் சிதம்பரத்திற்கு ஓடியது போத்துக்கேயர் காலத்திலே. போத்துக்கேயர் காலத்திலே கடுமையான கிறிஸ்தவ வன்முறைக்கு உள்ளானோம். தற்பொழுது தொடர்ச்சியாக விடுதலை பெற்ற பின்னர் குறிப்பாக கடந்த 12 ஆண்டுகளாக கிறிஸ்தவர்கள் மீண்டும் சைவர்கள் மீது வன்முறையை ஏவுகின்றார்கள் என்பதை நான் அவர்கள் மீது கடுமையாக குற்றம் சாட்டுவேன்.

**கேள்வி : உங்களுடைய தற்போதைய உரையாடலின்படி மிருசுவிலிலே பிள்ளையார் கோவில் தாக்கப்பட்டதன் பின் பாதிரியார்களாக இருக்கலாம் என்று நீங்கள் சந்தேகிக்கின்றீர்கள் அப்படித்தானே?**

பதில் : இல்லை காவல்துறையின் அறிக்கை வரும்வரை நான் யாரையும் குற்றம் சுமத்த மாட்டேன் சந்தேகப்பட மாட்டேன்.

கேள்வி : அப்படியாக இருந்தால் நீங்கள் ஒவ்வொரு சிலைகளும் உடைக்கப்பட்டதாக கூறும்பொழுது கிறிஸ்தவ மதத்தை சார்ந்தவர்கள் தான் உடைத்திருக்கின்றார்கள் என்று அதனை கோடிட்டு காட்டியிருக்கின்றீர்கள். ஆகவே இது ஏன் அவர்களால் நடந்திருக்க முடியாது என்று கூற முடியாது இருக்கின்றது.

பதில் : நான் முன்பு கூறிய அனைத்து வன்முறைகளுக்கும் என்னிடம் சாட்சியங்கள் இருக்கின்றன. காணொளிகள் இருக்கின்றன இதிலே இன்னும் புலனாய்வு முடியவில்லை அதனால் தான் நான் முன்பு நடந்த பிரச்சனைகளை சாட்சியங்களோடும் காணொளிகளோடும் வழக்கு பதிவுகளோடும் கூறுகின்றேன். இந்த சம்பவத்திற்கு எங்களுக்கு இன்னும் சரியான தகவல் வரவில்லை இன்றோ நாளையோ வந்துவிடகூடும். வந்ததன் பின்னர் தான் அது யார் என்று தெரியும். கிறிஸ்தவரா, முகமரா அல்லது சமயம் சாராதவரா அல்லது நாத்தீகரா அல்லது அவர் ஒரு குடிகாரனா கொலைகாரனா தேவையில்லாமல் மதக்கலவரங்களை உண்டுபன்னுவதற்காக தூண்டப்பட்டவரா இவ்வாறு யார் வேண்டுமானாலும் அதை இடித்திருக்கலாம். சாதாரணமாக இல்லாமல் திட்டமிட்டு அதை இடித்திருக்கின்றார்கள்.

ஒருவர் நின்று பார்க்கின்றார் எங்கிருக்கின்றது என்று கவனிக்கின்றார் நேரடியாக வந்து ஒரே இடியில் இடித்துவிடுகின்றார். ஒரு வண்டியிலுள்ள கியரிலே மிகப்பலமான கியர் ரிவேஸ் கியர் தான். சென்ற வாகனம் நின்றுவிட்டு பின்னர் இடித்துள்ளமை காணொளி காட்சியாக பார்க்க கூடியதாக உள்ளது. அவர் யார் என்பதை அரசு தான் கண்டுபிடித்து கூற வேண்டும்.

**கேள்வி : ஆனால் மிருசுவிலிலே இவ்வாறான மத வன்முறைகள் தொடர்ந்தும் இடம்பெற்றதாக கூறுகின்றீர்கள் அப்படித்தானே?**

பதில் : நானே நேராக பார்த்த வன்முறை கிறிஸ்தவர்கள் திரு.மோகன் என்பவரை தாக்கி அவருக்கு காயத்தை ஏற்படுத்தி அவருடைய ஈருருளி திறப்பையும் பறித்துக்கொண்டு ஓடிவிட்டனர். இதற்கு நான் சாட்சியாக இருக்கின்றேன்.



# உள்ளூராட்சி அதிகாரத்தை மீறி நியமனங்களை புகுத்துவதை நிராகரித்தது வலி கிழக்குப் பிரதேச சபை - அழுத்தம் தொடர்ந்தால் நீதிமன்றம் செல்லவும் முடிவு

உள்ளூராட்சி மன்றங்களால் நியமிக்கப்படும் அட்டவணைப்படுத்தப்படாத ஆளணியை பல்பணி அபிவிருத்திச் செயலணி திணைக்களம் ஊடாக நிரப்ப முயற்சிக்கப்படுவதை வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை நிராகரித்துள்ளதுடன் தொடர் அழுத்தம் காணப்பட்டால் நீதிமன்றம் செல்லவும் முடிவெடுத்துள்ளதாக வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார். வடக்கு மாகாண திணைக்களங்களில் ஒரு இலட்சம் வேலைவாய்ப்பில் பயிற்சி பெற்ற 105 பேரை ஆரம்ப நிலை சேவை தேவையின் நிமிர்த்தம் தற்காலிக அடிப்படையில் உள்வாங்குவதற்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு பிரதம செயலாளர் கடிதம் மூலம் அறிவித்திருந்தார். வடக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களம் 40 பயிலுநர்களை முதற்கட்டமாக உள்ளூராட்சி மன்றங்களுக்கு பகிர்ந்தளித்துள்ளது. இது தொடர்பில், யாழ். மாநகர சபை கடிதம் ஒன்று அனுப்பப்பட்டு அதன் பிரதிகள் ஏனைய பிரதேச சபைகளுக்கும் முகவரியிடப்பட்டிருந்தன. இந் நிலையில் நியமனக் கடிதங்கள் எதுவும் அற்ற நிலையில் குறித்த பயிலுனர்கள் பிரதேச சபைகளுக்கு அனுப்பப்பட்டதுடன் ஏனைய வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைக்கு மூன்று பயிலுனர்கள் அனுப்பப்பட்டனர். இதனையடுத்து, வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் பிரதேச சபையின் கூட்டத்தினைக் கூட்டியிருந்தார்.

அக் கூட்டத்தில் தவிசாளார், உள்ளூராட்சி மன்றங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட அட்டவணைப்படுத்தப்படாத ஆளணி நியமனங்களை மத்திய அரசின் தாபனங்கள் அரசியல் காரணங்களுக்காகக் கையாள்வது ஏற்றுக்கொள்ளமுடியாது. ஆளணி நியமனம் தொடர்பில் உள்ளூராட்சி மன்றங்களால் ஏற்கனவே பகிரப்பட்டு கேள்விக்கு இடமின்றி அதிகாரம் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்துள்ளது. அதனை தற்போது கேள்விக்குட்படுத்துகின்றனர். எமது சபைகளில் நிலவும் வெற்றிடங்களுக்கு பகுதி பகுதியாக நாம் உரிய அனுமதிகளைப் பெற்று நேர்முகத் தேர்வுகளை நடத்தி தெரிவு செய்யப்பட்டவர்களது பெயர் விபரங்களையும் பகிரங்கப்படுத்திவிட்டோம். ஆனால் அந் நியமனங்களுக்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி தேவை என வடக்கு மாகாண சபை கருதியமையினால் அங்கு அனுப்பப் பட்டிருக்கின்றது. நியமனத்திற்குத் தெரிவானவர்கள் நியமனத்தினை விரைவுபடுத்த மனித உரிமை ஆணைக்குழுவைக்கோரியுள்ளனர்.


எனினும் அது அரசாங்கத்தின் அனைத்து ஆட்சேர்ப்புக்களையும் தற்காலிகமாக நிறுத்துதல் என்ற காரணத்தில் நிறுத்தப்பட்டுள்ளது. எமது சபைகளில் அங்கீரிக்கப்பட்ட ஆளணி எண்ணிக்கை உரியவாறு நிரப்ப முடியாமை காரணமாக நாம் வெளிவாரியாக சனசமூக நிலையங்கள் ஊடாகப் பணியாளர்களைப் பெற்றே மக்களுக்கு சேவை ஆற்றுகின்றோம். இவ்வாறாக சபைகளில் பலர் வருடக்கணக்கில் கடின பணியை ஆற்றிவருகின்றனர். அவ்வாறு பணியாற்றுவர்களுக்கு நேர்முகத்தேர்வில் கூட 10 புள்ளிகள் வழங்குகின்றோம். இவர்களின் நியமனங்களை அரசாங்கம் ஏற்பதை விடுத்து, புதிதாக முறையற்ற நியமனங்களை மேற்கொள்வதை நாம் மறுக்கின்றோம். புதிதாக வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படுவதை நாம் வரவேற்கின்றோம். ஆனால் அந் நியமனங்கள் எமது சபையின் அதிகாரங்களை மீறாத வகையில் கடந்த காலத்தில் எமது சபைக்காக பணியாற்றுபவர்களை தூக்கி வீசாத வகையில் அமைய வேண்டும். ஏற்கனவே நிதி அமைச்சு ஆரம்ப நிலைசேவை வகுப்பிற்குத் தேவையான பணியாளர்களை பல்பணி அபிவிருத்திச் செயலணி வாயிலாக நியமிக்க கடந்த ஆண்டு சுற்றிக்கை வெளியிட்டிருந்தபோதும் அது உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஏற்றது என சபை கருதவில்லை. எம் மீது தொடர் அழுத்தம் பிரயோகிக்கப்பட்டால் நீதிமன்றம் செல்லவேண்டியேற்படும் எனவும் தவிசாளரால் எடுத்துரைக்கப்பட்டது.

இந் நிலையில் ஆளணியை நிரப்புதல் தொடர்பாக நேர்முகத்தேர்வுகள் இடம்பெற்றுள்ள நிலையில் புதிதாக அனுப்பப்பட்டுள்ள குறித்த பயிலுனர்களை அனுமதிப்பதில்லை. நாம் ஏற்கனவே நேர்முகத் தேர்வுகளை நடத்தியிருக்கும் நியமனத்திற்கு முன்னுரிமை அளித்து நடவடிக்கை எடுக்க தீர்மானம் எடுக்கப்பட்டது. மேலும் உள்ளூராட்சி மன்றத்திற்குப் பகிரப்பட்டு இதுவரைகாலமும் தடையின்றி பிரயோகிக்கப்பட்ட அட்டவணைப்படுத்தப்படாத நியமனங்களை அதிகாரத்தை உள்ளூராட்சி மன்றங்கள் பிரயோகிக்கஇடமளிக்கப்படவேண்டும் எனவும் இல்லையேல் பொருத்தமான நீதிமன்றத்தை நாடவும் முடிவு எடுக்கப்பட்டது. இத் தீர்மானங்களுக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் தவிர்ந்த சகல கட்சிகளும் ஏகமனதாக அங்கீகாரமளித்தனர்.


CHIEF SECRETARY'S SECRETARIAT, NORTHERN PROVINCE

Allocation of Multi-Purpose Development Assistants (MDAs) to III Primary Grade Service Requirements




Department of Local Government, Northern Province

Allocation of Multi - Purpose Development Assistants (MDAs) to III Primary Grade Service Requirements





# வாசலில் ஓவியம் இரண்டு



கிராமமே அமர்க்களப்பட்டுக் கொண்டிருந்தது. காரணம் வேறு ஒன்றும் இல்லை பக்கத்து டவுனில் புதியதாய் தொழில் தொடங்கியிருக்கும் பலசரக்கு மையம் ஒன்று கிராமத்தில் பொங்கல் கோலப் போட்டி நடத்துவதாக அறிவித்திருந்தது. லோக்கல் தொலைக்காட்சி, பத்திரிகைச் செய்திகள், துண்டு பிரசுரங்கள் போன்றவை பெண்கள் அனைவரையும் அதில் கலந்துகொள்ள அழைத்துக் கொண்டிருந்தது.

பொங்கல் அன்று மாலை ஏழு மணிக்கு வரும் கலெக்டர் அவற்றை பார்த்து சிறந்த கோலங்களை தெரிவு செய்வார்.

ரொக்கப் பரிசுகளும், பல மாதங்களுக்கான இலவச மளிகை சாமான் கூப்பன்களும் உண்டு.

புதுமையான போட்டி.

கிராமத்து பெண்களுக்கு கேட்கவா வேண்டும். ஆளாளுக்கு வீட்டில் கூடி திட்டம் போட ஆரம்பித்து விட்டார்கள்.

'நீ இப்படி போடு, நான் அப்படி போடுகிறேன்' என்று.

மலர்விழி பன்னிரெண்டாவது படிப்பவள். அப்பா கிடையாது.

வீட்டில் மூன்று பசு மாடுகள் உண்டு. அதில் பால் கறந்து விற்று வரும் வருமானத்தில்தான் காலம் ஓடுகிறது.

மலர்விழி படிப்பில் சுட்டி. அதிகாலையில் எழுந்து அம்மாவுக்கு உதவி செய்து, பால் கறக்கும் வரை பாத்திரம் மாற்றிக் கொடுத்து பக்கத்து ஊர் டீ கடை வரை கொண்டு போய் ஊற்றி வருவாள். அதன் பின்பு பள்ளிக்கு கிளம்பிச் செல்வாள். அவள் மெல்ல அம்மாவிடம் ஆரம்பித்தாள்.

"அம்மா?"என்றாள் மெல்லிய குரலில்.

"என்னடி புதுசா ராகம் பாடுதே"

"நானும் போட்டியில கலந்துக்கறேன்ம்மா"

"என்ன போட்டியில?"

"நீ வேற ஊரே அமர்க்களப்படுதேம்மா... கோலப் போட்டி"

"பார்த்தேன், நானும் நோட்டீசு பார்த்தேன். நமக்கு எதுக்கு அதெல்லாம். நீ எட்டுப் புள்ளி கோலம் எல்லாம் போடவே தடுமாறுவே. உனக்கெதுக்கு இந்த வேலையெல்லாம். அதெல்லாம் வேண்டாம், உன்னோட வேலையைப் பாரு" என்று சொல்லி விட்டாள்.

மலர்விழிக்கு வருத்தம்தான்.

எப்படியாவது அம்மாவிடம் சம்மதம் வாங்க வேண்டும். இறங்கிப் போய் கெஞ்சினால் அம்மா வழிக்கு வருவாள்.

அன்று பால் ஊற்றி விட்டு வந்ததும் சாப்பிட உட்கார்ந்தாள்.
அம்மாக்காரி தட்டில் சூடாய் இட்லியும், சாம்பாரும் ஊற்றினாள்.

நல்ல சுவை.

"அம்மா வழக்கத்தைவிட இன்னைக்கு சாம்பார் சூப்பரா இருக்கு. எங்கிட்ட மட்டும் காசு இருந்ததுன்னு வச்சுக்கயேன், உன்னோட விரலுக்கு ஒரு தங்க மோதிரம் வாங்கிப்போடுவேன். சரிதான். மோதிரம் வாங்கற அளவுக்கு எங்கிட்ட எங்கே பணம் இருக்கு?" என்று அங்கலாய்த்தாள்.

"என்னடி! வழக்கமான இட்லி சாம்பார், எதுக்கு நீ இப்ப பீடிகை போடறே?" என்றாள்.

"அம்மா நான் ஐம்பது வீடுகளுக்கு மேலே பால் ஊத்துறேன். எல்லாத்துக்கும் மேலே நான் போற வழியில இருக்கற கோலத்தை எல்லாம் ரசிக்கிறேன். நான் நிச்சயம் போட்டியில ஜெயிப்பேம்மா?"

"சரி அதுக்கு கோலப்பொடி கலர் கலரா வாங்க காசு வேணும். அதுக்கு என்னப் பண்ண போறே?"

"நீ எனக்கு கொடுக்கற பணத்துல சேர்த்து வச்சிருக்கேன்ம்மா?"

"உன் இஷ்டம். கலந்துக்க. போட்டியில கோலம் போடறேன்னு பால் ஊத்தறதை அன்னைக்கு லேட் ஆக்கிடாதே" என்றாள்.

தான் கோலப் போட்டியில் கலந்துகொள்ளப் போவதை சில தோழிகளிடம் சொல்ல, அவர்கள் கிண்டல் செய்ய ஆரம்பித்தார்கள்.

அவள் அதை கொஞ்சமும் பொருட்படுத்தவில்லை.

போட்டி அன்று ஊரே பரபரப்பாக இருந்தது.

சீக்கிரமே எழுந்தவள் வாசலைப் பெருக்கி தண்ணீர் தெளித்தாள்.

பாலை அவசர அவசரமாய் ஊற்றி விட்டு வந்து கோலம் போட ஆரம்பித்தாள்.

ஒரு மணி நேரத்தில் அவளின் கோலம் கொஞ்சம், கொஞ்சமாக உருப்பெற ஆரம்பித்தது. ஏராளமானவர்கள் கோலம் போட்டிருந்தார்கள்.

நேரம் விறுவிறுப்பாக சென்றது.

மாலை நேரம்! கலெக்டர் தனிக் காரில் வந்து இறங்கினார்.

ஒவ்வொரு கோலத்தையும் நின்று நிதானமாய் பார்த்தார்.

அவருடன் போட்டிக்கு அழைப்பு விடுத்திருந்த அங்காடி ஆட்களும் வந்திருந்தனர்.

கலெக்டருடன் வந்த கேமரா மேன் தனித்தனியாக போட்டோ எடுத்து கொண்டிருக்க அங்காடி ஆட்களுடன் வந்திருந்த விளம்பர நிறுவனத்தினரும் பாய்ந்து, பாய்ந்து பல கோணங்களில் படம் எடுத்துக் கொண்டிருந்தார்கள்.

கலெக்டருக்கு தனி மேடை அமைக்கப்பட்டிருந்தது.

அவர் புகைப்படங்களை பரிசீலிக்க ஒரு மணி நேரம் ஆகும் என்று அறிவிப்பு செய்யப்பட்டிருந்தது.

அங்காடி ஆட்கள் ஒட்டு மொத்த கிராமத்திற்கும் சர்க்கரைப் பொங்கல், வெண் பொங்கல், வடை என வண்டிகளில் சுடச் சுட கொண்டு வந்து பரிமாறினார்கள்.

நேரம் ஆக ஆக கோலம் போட்டு காத்திருந்த பெண்களின் முகத்தில் பதற்றம்!

பரிசு யாருக்கு கிடைக்கப் போகிறதோ?

யாருக்கு கிடைக்க வேண்டும் என்பதை விட யாருக்கு கிடைக்கக் கூடாது என்று சில பெண்கள் நினைக்காமல் இல்லை.

அங்காடி உரிமையாளர் கிராமத்து மக்கள் அனைவரையும் மேடையின் முன் வந்து நாற்காலிகளில் அமரச் சொன்னார்.

எல்லோர் முகத்திலும் பரபரப்பு.

கலெக்டர் எழுந்தார்.

"என்னோட பெயர் கீதா. நான் ஆறு மாசத்துக்கு முன்னாடி தான் இங்கே கலெக்டரா வந்தேன். நானும் நல்லா கோலம் போடுவேன். கலெக்டர் கலந்துக்க கூடாதுன்னு அவங்க சொல்லலை. இருந்தாலும் இளைய தலை முறை பெண்கள் தங்களோட திறமையை வெளிக் கொண்டு வருவதற்கான சந்தர்ப்பம் இது. அதுவும் பரிசோட வருதுன்னா சொல்லவா வேணும். எனக்கு இதுல கலந்து கிட்டதுல ரொம்ப சந்தோஷம். மயிலாப்பூர்ல மார்கழி மாசம் முழுக்க வீட்டு வாசல்ல கோலம் போட்டு நடுவில பரங்கிப் பூ வைப்போம். அதுக்கப்புறம் பரங்கிப் பூவை இங்கேதான் பார்க்கிறேன்.

நான் இந்த அங்காடி அதிபர் கேட்டதும் உடனே ஒப்புதல் தந்ததற்கு காரணம் முதல்ல இந்த கிராமத்தைப் பார்க்கலாம், மக்களை சந்திக்கலாம்ன்னு தான். இந்த ஒரு மணி நேரம் ஒவ்வொரு கோலப் போட்டோக்களையும் ஆராய்ஞ்சு மூன்று பரிசுக்குரியவர்களை தேர்ந்தெடுத்து இருக்கோம். முதல்ல மூன்றாவது பரிசுல இருந்து ஆரம்பிக்கிறேன். இதுல முதல், இரண்டு, மூணுன்னு நினைக்க வேண்டாம். எல்லாமே சிறப்பா இருந்தது. இருந்தாலும் போட்டின்னு அறிவிச்சதால இப்படி கொடுக்கறோம். எல்லோருக்கும் வாழ்த்துகள். முதல்ல மூன்றாம் பரிசு மஞ்சுளா செல்வதுரை, மேல வீதி. இவங்க போட்ட கோலம் பாரம்பரிய காளைமாடு பிடித்தல். இருபத்தஞ்சாயிரம் ரொக்கம் மற்றும் மூன்று மாதத்திற்கான மளிகை கூப்பன்"

கூடியிருந்தவர்கள் கரகோஷம் எழுப்பி ஆர்ப்பரித்தார்கள்.

மஞ்சுளா செல்வதுரை மேடையேறி பரிசினை கலெக்டரிடம் வாங்கும் போது கைத்தட்டல்கள் பறந்தன.

"அடுத்து இரண்டாவது பரிசு, தங்கராணி தங்கவேல். இவங்க வரைஞ்சது ஒரு மயில் கூட்டம். ரொம்ப தத்ரூபமா இருந்தது. இவங்களுக்கு ஐம்பதாயிரம் ரொக்கம் மற்றும் ஆறு மாதத்திற்கான மளிகைப் பொருட்கள் கூப்பன். வாழ்த்துகள்" என்று கூறி பரிசுகளை வழங்கினார்.

"அடுத்து, நீங்கள் மிக ஆவலுடன் எதிர்பார்க்கும் முதல் பரிசு சாருலதா தணி கைராஜ். இவங்களுக்கு முதல் பரிசு ஒரு லட்சம் ரொக்கம் மற்றும் ஒரு வருடத்திற்கான மளிகை கூப்பன்" என்றதும் கூட்டம் ஆர்ப்பரித்தது.

கலெக்டர் எல்லோருக்கும் பரிசுகளை வழங்கினார்.

சில பெண்கள் மலர்விழியை அலட்சியமாகப் பார்த்தனர்.

எல்லோரும் எழுந்திருக்க ஆரம்பிக்க 'ஒரு நிமிஷம்' என்றார் கலெக்டர்.

எல்லோரும் மீண்டும் அமர்ந்தார்கள்.

"நானும் அங்காடி ஓனர் மனைவியும் தீவிரமா பார்த்ததுல ஒரு ஸ்பெஷல் படம் கண்ணுல பட்டது. அது எங்க மனசை விட்டு இறங்கவேயில்லை. அந்தப் படத்தை கோலமாக வரைஞ்ச பெண்ணுக்கு சிறப்பு பரிசு இரண்டு லட்சம் மற்றும் ஐந்து வருடத்துக்கு மளிகை கூப்பன் வழங்க முடிவு பண்ணியிருக்கோம். அந்தப் பெண் ஏன் அந்த படத்தை கோலமா வரைஞ்சான்னு தெரியலை. அவங்களே மேடைக்கு வந்து விளக்கம் சொன்னா நல்லா இருக்கும்" என்று நிறுத்தினார்.

ஒட்டு மொத்த கூட்டமும் 'யார் யார்' என்று நாலாபுறமும் பார்த்தது.

கலெக்டர் சிரித்துக் கொண்டே, "ஏன் இந்த சஸ்பென்ஸ். நானே சொல்றேன். மலர்விழி விநாயகம்" என்றார்.

மலர்விழி மெல்ல எழுந்தாள்.

தனது ஒற்றைக் கட்டைக் காலால் விந்தி விந்தி நடந்து மேடையேறினாள்.

கலெக்டர் அவள் தோளைத் தட்டி, "வாழ்த்துகள் மலர்விழி. முதல்ல உன்னைப் பத்தியும் உன்னோட படத்தைப் பத்தியும் சொல்லு" என்றார்.

மலர்விழி கண்கள் லேசாய் பணித்திருந்தன.

"மூணு தலைமுறையா நாங்க பால் வியாபாரம் தான் பண்ணிட்டு வர்றோம். இப்ப நானும் அம்மாவும் மட்டும் தான். அப்பா சில வருடங்கள் முன்பு ஆக்சிடெண்ட்ல இறந்துட்டார். நான் நிறைய செய்தி தாள் படிப்பேன். அதுல மடி காய்ஞ்ச மாடுகளை கறிக்கு லாரியில ஏத்திட்டுப் போகும் போது கண்ணுல தண்ணி வரும். என்னோட ஆசையெல்லாம் எப்படியாவது சின்ன நிலம் வாங்கி அதுல மடி மரத்துப்போன மாடுகளுக்கு கோசாலை அமைக்கறதுதான். எல்லாத்துக்கும் மேலே இந்த கிராமத்துல சரியான கழிவறை கிடையாது. அதனால தான் கோசாலை படமும், லாரியில மாடுகளை ஏத்திட்டு போற படமும் வரைஞ்சேன். நீங்க கொடுக்கப் போற ரெண்டு லட்சத்துல முதல்ல ஒரு கழிவறை கட்டுவேன். பக்கத்து கிராமத்துல ஒரு அனாதை ஆஸ்ரமம் இருக்கு. அதுக்கு நீங்க கொடுக்கப் போற மளிகை கூப்பனை கொடுப்பேன்" என்றாள்.

கைத்தட்டல் விண்ணைப் பிளந்தது.

கலெக்டர் கண்கள் கலங்க, "இந்த பரிசுகளை நீயே உன் குடும்பத்திற்கு பயன் படுத்திக்கொள். உன்னோட மேல் படிப்புக்கு உதவும். இங்கு கழிவறையை நானே பொறுப்பெடுத்து கட்டித் தர்றேன். அப் புறம்" என்றவர் அங்காடி முதலாளி பக்கம் திரும்பினார்.

"அந்த அனாதை ஆஸ்ரமத்துக்கும் இந்தப் பொண்ணு விருப்பப்படி மளிகை பொருட்கள் அனுப்பிடுங்க. உங்களுக்கு சங்கடம்ன்னா நான் அதுக்கு பணம் தர்றேன்" என்றார்.

அங்காடி முதலாளி, "வேண்டாம்மா நாங்களே காலம் முழுக்க தந்துடுறோம்" என்றார்.

"இப்ப சந்தோஷம் தானே மலர்விழி" என்று தோளைத் தட்டினார் கலெக்டர்.

கலெக்டர் மெல்ல மலர்விழியை அணைத்துக் கொள்ள கேமராக்கள் உள் வாங்கின.

நிகழ்ச்சியை பார்த்து ஒட்டு மொத்த கூட்டமும் மெய் சிலிர்த்து நின்றது.




# மரத்தில் ஒரு செயற்கைக்கோள்!

போன ஆண்டும் பெருந்தொற்று இருந்தது. இந்த ஆண்டும் அது நீடிக்கிறது. ஆனால் முன்பு ஆலைகள், சாலைகள் என்று சகலமும் பொது முடக்கத்தில் இருந்ததால், காற்று மாசு குறைந்திருந்தது. ஆனால் இந்த ஆண்டு அப்படி இல்லை என்கின்றனர்,

விஞ்ஞானிகள்.அண்மையில், ஹவாய் தீவில் உள்ள மவுனா லோவா வளிமண்டல கண்காணிப்பகத்தில், காற்று மாசு அளவுகள் எடுக்கப்பட்டன. அதன்படி காற்று மாசின் அளவுகள் மோசமான உச்சத்தை எட்டியுள்ளதாக விஞ்ஞானிகள் கவலை தெரிவித்துள்ளனர். எந்த அளவுக்கு மோசம்? பூமியில் கடந்த 40 லட்சம் ஆண்டுகளாக இல்லாத அளவில் காற்றில் மாசு அதிகமாகியுள்ளது.கடந்த பல மாதங்களாக தொடரும் பொதுமுடக்கம், சில வகை காற்று மாசுகளை குறைத்திருப்பது உண்மை தான்.

அதனால் தான், காற்றின் புகை மண்டலம் விலகி, வெகுதொலைவு வரை தெளிவாக பார்க்க முடிந்தது. ஆனால், சில நூற்றாண்டுகளாக, தொடர்ந்து காற்றில் கலக்கும் மாசுபாடுகளின் அளவு, ஒரு சில மாதங்கள் முடக்கத்தால் அடியோடு மறையாது என, விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். மாசுபாட்டை குறைக்க, பொதுமுடக்கத்தை நம்பியிருப்பதைவிட, மின் வாகனங்கள், சூரிய மின்சாரம், போன்றவற்றை அதிக அளவில் உலக மக்கள் பயன்படுத்துவதே நிரந்தர தீர்வு என்கின்றனர், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள்.




# மஸ்கின் சுரங்க போக்குவரத்து ஆரம்பம்

ஒரு வழியாக, டெஸ்லா அதிபர் எலான் மஸ்கின், கனவு திட்டங்களுள் ஒன்று செயல்பாட்டுக்கு வந்தது. ஐந்து ஆண்டுகளுக்கு முன், போக்குவரத்து நெரிசலை ஒழிக்க, 'தி போரிங் கம்பெனி'யை துவங்குவதாக அறிவித்தார் மஸ்க். அதன் சிறிய பகுதியாக அண்மையில், லாஸ் வேகாஸ் நகருக்கு அடியில், 1.7 மைல் நீளமுள்ள சுரங்க சாலையை அவர் துவங்கியுள்ளார்.



இதில் டெஸ்லாவின் மின்சார கார்கள் மட்டுமே இயங்கும். அதில் கட்டணம் செலுத்தி பயணியர் செல்லலாம். சூதாட்ட நகரமான லாஸ் வேகாசின் முக்கியமான மூன்று நிறுத்தங்களுக்கு மட்டும், மஸ்கின் சுரங்கப்பாதை போக்குவரத்து இயங்கும்.

அடுத்த சில ஆண்டுகளில், லாஸ் வேகாஸ் நகரின் எல்லா பகுதிகளையும் இணைக்கும்படி சுரங்க பாதையை அமைப்பார் மஸ்க். அப்போது, சுரங்க சாலையில் காந்த ரயில் மேடைகள், எந்த காரையும் ஏற்றிக்கொண்டு மணிக்கு, 150 மைல் வேகத்தில் பறக்கும் என மஸ்க் அறிவித்துள்ளார்.

# கடலில் கிடைக்கும் அரிய உலோகம்!



லித்தியம் மிக கிராக்கிஉள்ள உலோகம். ஆஸ்திரேலியா, சிலி, சீனா உள்ளிட்ட, எட்டு நாடுகளில் மட்டுமே லித்தியம் கிடைக்கிறது. எனவே தான் லித்தியத்திற்கு மவுசு.இத்தனை மவுசுள்ள ஒரு உலோகம், கடலில் பல கோடி டன்கள் கொட்டிக் கிடக்கிறது என்பது தான் ஆச்சரியம். அதை விட ஆச்சரியம், கடல் நீரிலிருந்து லித்தியத்தை பிரித்தெடுக்கும் தொழில்நுட்பம் அண்மையில் தான் உருவாக்கப்பட்டுள்ளது.

'லித்தியம் லாந்தானம் டைட்டானியம் ஆக்சைடு' (எல்.எல்.டி.ஓ.,) என்ற பொருளால் உருவாக்கப்பட்ட ஒரு வடிகட்டியின் வழியே, கடல் நீரையும், மின்சாரத்தையும் செலுத்தி, சில வேதி வினைகளால் லித்தியம் பாஸ்பேட்டை பிரித்தெடுக்கும் முறையை விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.


இந்த கண்டுபிடிப்பு பற்றிய கட்டுரை, 'எனர்ஜி அண்டு என்விரோன்மென்டல் சயின்ஸ்' என்ற ஆய்விதழில் வெளியாகியுள்ளது. இத்தொழில்நுட்பத்தின் மூலம், கடல் நீரிலிருந்து, 1 கிலோ லித்தியம் எடுக்க வெறும், 367 ரூபாய் தான் செலவாகிறது என கண்டுபிடிப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த வேதிவினையின் போதே, பக்கவிளைவாக, 0.87 கிலோ ஹைட்ரஜன் வாயு, 31 கிலோ குளோரின் வாயு ஆகியவையும் கிடைக்கும். இவற்றின் சந்தை மதிப்பு முறையே, 506 மற்றும் 858 ரூபாய்.இவை எல்லாவற்றையும்விட, கடல் நீரை எடுத்து, அதிலிருந்து லித்தியத்தை பிரித்ததும் மிஞ்சக் கூடியது, தூய்மையான நீர். ஆம், கடல் நீரை குடிநீராக்கும் முறையும் இதே தொழில்நுட்பத்தோடு இலவசமாக வருகிறது. எனவே, அரபு உள்ளிட்ட பல நாடுகள் இத்தொழில்நுட்பத்தின் மீது கண் வைத்துள்ளன.

# பிரதிபலிக்கும் திரவ கண்ணாடி!

பொத்தானை தட்டினால் கண்ணாடியாக மாறி, எதிரில் இருப்பவைகளை பிரதிபலிக்கும். பொத்தானை அணைத்தால் எதையும் பிரதிபலிக்காமல், ஒளியை சிதறடிக்கும். இப்படி ஒரு விந்தை பொருளை விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.

அமெரிக்காவிலுள்ள வடக்கு கரோலைனாபல்கலைக்கழகம் மற்றும் ஜப்பானிலுள்ள கியூசு பல்கலைக்கழகம் ஆகியவற்றின் விஞ்ஞானிகள் இந்த கண்டுபிடிப்பை நிகழ்த்திஉள்ளனர்.



உலோகங்களின் மேற்பரப்பு ஒளியை பிரதிபலிக்கும். எனவே அவற்றால் கண்ணாடி போலவும் செயல்பட முடியும்.திரவ உலோகங்களும், பளபளவென்று இருப்பதால், அவையும் கண்ணாடி போலவே செயல்படும். ஆனால், சிறிதளவு மின்சாரம் பாய்ச்சுவதன் மூலம், திரவ உலோகங்களின் மேற்பரப்பு ஆக்சிஜனேற்றம் கொள்கிறது.

இதனால், ஒளியை சிதறடிக்கும் தன்மை மேற்பரப்புக்கு வந்துவிடுகிறது.இந்த எளிய யுக்தியை வைத்து, மின்சாரம் பாய்ச்சாதபோது கண்ணாடி போலவும், பாய்ச்சினால் பிரதிபலிக்காத பரப்பு போலவும் திரவ உலோகத்தை பயன்படுத்த முடியும். பொழுதுபோக்கு துறை, நோயறிதல், தொலைநோக்கிகள் போன்ற துறைகளில் குணம் மாறும் திரவ கண்ணாடி தொழில்நுட்பம் எதிர்காலத்தில் இடம்பெறக்கூடும்.

**அறிவியல் என்ற விளக்கை எந்த ஒரு இடத்தில் பற்ற வைத்தாலும், எல்லா திசைக்கும் வெளிச்சம் கிடைக்கும்.**

**ஐசக் அசிமோவ்,**
**அறிவியல் புனைவு எழுத்தாளர்**



# விளையாட்டு செய்திகள்

## விம்பிள்டன்- டோக்கியோ ஒலிம்பிக்கில் இருந்து ரபேல் நடால் விலகல்!

டென்னிஸ் உலகில் 'கிளே ஒ.ஃ.ப் த கிங்' என வர்ணிக்கப்படும் ஸ்பெயினின் ரபேல் நடால், எதிர்வரும் விம்பிள்டன் மற்றும் டோக்கியோ ஒலிம்பிக்கில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

இந்த திடீர் அறிவிப்பானது நடாலின் இரசிகர்களை கடும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. இதுகுறித்து நடால் கூறுகையில்,

'என்னுடைய உடல்நிலையைக் கருத்தில் கொண்டு இந்த முடிவை எடுத்துள்ளேன். இந்த முடிவை எடுப்பது அவ்வளவு சுலபமாக இல்லை. என்னுடைய குழுவினருடன் ஆலோசித்து இந்த அறிவிப்பை வெளியிடுகிறேன்.

பிரான்ஸ் பகிரங்க டென்னிஸ்- விம்பிள்டன் பகிரங்க டென்னிஸ் தொடருக்கு இடையில் இரண்டு வார இடைவெளி மட்டுமே உள்ளது. செம்மண் தரையில் விளையாடிய பின்னர், உடனடியாக தனது உடலை புல்தரைக்கு ஏற்றவாறு மாற்றுவது எளிதானது அல்ல' என கூறினார்.

ஆண்கள் டென்னிஸ் உலகில் 20 முறை கிராண்ட்ஸ்லாம் வென்றுள்ள ரபேல் நடால், பிரான்ஸ் பகிரங்க டென்னிஸ் தொடரில் மட்டும் 13 முறை சம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

இதன்மூலம் பிரான்ஸ் பகிரங்க டென்னிஸ் தொடரில் அதிக சம்பியன் பட்டங்களை வென்ற வீரர் மற்றும் ஒரு கிராண்ட்ஸ்லாம் போட்டியில் அதிக சம்பியன் பட்டங்களை வென்ற வீரர் என்ற பெருமையும் பெற்றார்.

இந்தநிலையில் அண்மையில் நடைபெற்ற பிரான்ஸ் பகிரங்க டென்னிஸ் தொடரில், ரபேல் நடால் 14ஆவது சம்பியன் பட்டத்தை வெல்வார் என பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், உலகின் முதல்நிலை வீரரான செர்பியாவின் நோவக் ஜோகோவிச்சிடம் அரையிறுதியில் அதிர்ச்சி தோல்வியடைந்து தொடரிலிருந்து வெளியேறினார்.

இந்தநிலையில் நடாலுக்கு சற்று ஓய்வு தேவை என்பதால் இந்த தொடர்களிலிருந்து விலகுவதாக முடிவெடுத்துள்ளார்.

வரலாற்று சிறப்பு மிக்க விம்பிள்டன் பகிரங்க டென்னிஸ் தொடர், எதிர்வரும் 28ஆம் திகதி முதல் ஜூலை 11ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

அதன்பின் இரண்டு வாரம் இடைவெளியில் ஜூலை 23ஆம் திகதி முதல் ஒகஸ்ட் 8ஆம் திகதி வரை டோக்கியோ ஒலிம்பிக் தொடர் நடைபெறுகின்றது.



## யு.இ.எஃப்.ஏ யூரோ கிண்ணம்: உக்ரேன், பெல்ஜியம், நெதர்லாந்து அணிகள் வெற்றி!

2020ஆம் ஆண்டு யு.இ.எ.ஃப்.ஏ யூரோ கிண்ண கால்பந்து தொடர் தற்போது விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றது.

அந்த வகையில் குழுநிலைப் போட்டிகளின் இரண்டாம் கட்ட போட்டிகள் நடைபெற்றன. இப்போட்டிகளின் முடிவுகளை பார்க்கலாம்.

தேசிய அரினா விளையாட்டரங்கில் நடைபெற்ற போட்டியில், உக்ரேன் மற்றும் வட மெசிடோனியா அணிகள் மோதின.

குழு 'சி'யில் நடைபெற்ற இப்போட்டியில், உக்ரேன் அணி 2-1 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது.

இதில் உக்ரேன் அணி சார்பில், ஹென்ரி யார்மலென்கோ 29ஆவது நிமிடத்தில் ஒரு கோலும், ரோமன் யாரெம்சுக் 34ஆவது நிமிடத்தில் ஒரு கோலும் அடித்தனர்.

வட மெசிடோனியாயில் எஸ்ஜன் அலியோஸ்கி 57ஆவது நிமிடத்தில் ஒரு கோல் அடித்தார்.

பார்க்கென் விளையாட்டரங்கில் நடைபெற்ற போட்டியில், டென்மார்க் மற்றும் பெல்ஜியம் அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

குழு 'பி'யில் நடைபெற்ற இப்போட்டியில், பெல்ஜியம் அணி 2-1 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது.

இதில் பெல்ஜியம் அணி சார்பில், தோர்கன் ஹசார்ட் 54ஆவது நிமிடத்தில் ஒரு கோலும், கெவின் டி பிரையன் 70ஆவது நிமிடத்தில் ஒரு கோலும் அடித்தனர்.

டென்மார்க் அணி சார்பில், யூசப் போல்சென் போட்டியின் இரண்டாவது நிமிடத்தில் ஒரு கோல் அடித்தார்.

ஆம்ஸ்டர்டம் விளையாட்டரங்கில் நடைபெற்ற போட்டியில், நெதர்லாந்து அணியும் ஆஸ்திரியா அணிகளும் மோதிக்கொண்டன.

குழு 'பி'யில் நடைபெற்ற இப்போட்டியில், நெதர்லாந்து அணி 2-0 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது.

இதில் நெதர்லாந்து அணி சார்பில், மெம்பிஸ் டி பே போட்டியின் 11ஆவது நிமிடத்தில் கிடைத்த பெனால்டி வாய்ப்பை பயன்படுத்தி முதல் கோலை செலுத்தினார். டென்செல் டம்பிரைஸ் 67ஆவது நிமிடத்தில் ஒரு கோல் அடித்தார்.




## தென்னாபிரிக்கா அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட்: மேற்கிந்திய தீவுகள் அணி அறிவிப்பு!

தென்னாபிரிக்கா கிரிக்கெட் அணிக்கெதிரான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில் விளையாடும், எதிர்பார்ப்பு மிக்க மேற்கிந்திய தீவுகள் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. 13பேர் கொண்ட இந்த அணியில், வேகப்பந்து வீச்சாளரான டேரன் பிராவோ மற்றும் இடது கை துடுப்பாட்ட வீரரான டேரன் பிராவோ ஆகியோர் புதிதாக அணிக்குள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் முதல் டெஸ்டின் போது விளையாடிய நக்ருமா போன்னர், இப்போட்டியில் இடம்பெறவில்லை என கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. கிரெய்க் பிராத்வைட் தலைமையிலான அணியில், ஜெர்மைன் பிளாக்வுட், டேரன் பிராவோ, ரோஸ்டன் சேஸ், ரஹ்கீம் கார்ன்வால், ஜோசுவா டா சில்வா, ஷெனோன் கேப்ரியல், ஜேசன் ஹோல்டர், ஷாய் ஹோப், கைல் மேயர்ஸ், கீரன் பவல், கெமர் ரோச், ஜெய்டன் சீல்ஸ் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.



தென்னாபிரிக்கா கிரிக்கெட் அணி, இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் மற்றும் ஐந்து போட்டிகள் கொண்ட ரி-20 தொடரில் விளையாடுவதற்காக மேற்கிந்திய தீவுகளுக்கு சென்றுள்ளது. தற்போது இரு அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகின்றது.

இதில் முதலாவதாக சென்.லுசியாவில் நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியில், தென்னாபிரிக்கா அணி இன்னிங்ஸ் மற்றும் 63 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. இப்போட்டியில், மேற்கிந்திய தீவுகள் அணி முதல் இன்னிங்ஸில் 97 ஓட்டங்களையும் இரண்டாவது இன்னிங்ஸில் 162 ஓட்டகளையும் பெற்றுக்கொண்டன. அதிகப்பட்ச ஓட்டங்களாக ரோஸ்டன் சேஸ் 62 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார். வேறு எந்த வீரரும் இரு இன்னிங்ஸ்களிலும் 20 ஓட்டங்கள் கூட கடக்கவில்லை.

இந்தநிலையில் தீர்க்கமான இரண்டாவது டெஸ்ட் போட்டியில், தொடரை முழுமையாக கைப்பற்றும் முனைப்பில் தென்னாபிரிக்கா அணியும் தொடரை சமநிலைப்படுத்தும் முனைப்பில் மேற்கிந்திய தீவுகள் அணியும் களமிறங்கவுள்ளன. இரு அணிகளுக்கிடையிலான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி, இன்று சென். லுசியாவில் ஆரம்பமாகவுள்ளது.

# உலக செய்திகள்

## வடகொரிய பதற்றமான உணவு பற்றாக்குறையை எதிர்கொண்டுள்ளது

வடகொரிய பதற்றமான உணவு பற்றாக்குறையை எதிர்கொண்டுள்ளதனை அந்நாட்டு தலைவர் கிம் ஜோங் உன் ஒப்புக்கொண்டுள்ளார். தலைநகர் பியோங்யாங்கில் இந்த வாரம் தொடங்கிய ஆளும் தொழிலாளர் கட்சி மத்திய குழுவில் உணவு நிலைமை குறித்து உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில், 'மக்களின் உணவு நிலைமை இப்போது பதற்றமாகி வருகிறது. ஆனால், கடந்த ஆண்டு இதே காலப்பகுதியுடன் ஒப்பிடும்போது தேசிய தொழில்துறை உற்பத்தி கால் பகுதி அதிகரித்துள்ளது' என கூறினார். கடந்த ஆண்டு சூறாவளி காரணமாக விவசாயத் துறை அதன் தானிய இலக்குகளை பூர்த்தி செய்யத் தவறிவிட்டது. அங்கு ஒரு கிலோ வாழைப்பழம் 45 டொலர்கள் ஆகும்.

இந்த நிகழ்வின் போது அமெரிக்கா மற்றும் தென் கொரியாவுடனான உறவுகள் குறித்து அதிகாரிகள் கலந்துரையாடுவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இதுவரை எந்த விபரங்களும் வெளியிடப்படவில்லை. இது இன்னொரு கடினமான 'மார்ச்' என அதிகாரிகளிடம் வடகொரியா தலைவர் கூறியதாக அரச ஊடகம் தெரிவித்துள்ளது. முக்கியமான உதவி இல்லாமல் 1990ஆம் ஆண்டுகளின் பஞ்ச காலத்தில் நாட்டின் போராட்டத்தைக் குறிக்க வட கொரியா அதிகாரிகள் பயன்படுத்திய சொல் மார்ச் ஆகும். அந்த நேரத்தில் பட்டினியால் இறந்த வட கொரியர்களின் மொத்த எண்ணிக்கை தெரியவில்லை. ஆனால் மதிப்பீடுகள் மூன்று மில்லியன் வரை உள்ளன.

இதனிடையே கொவிட்-19 பரவுவதைக் கட்டுப்படுத்த வடகொரியா தனது எல்லைகளை மூடியுள்ளது. இதன் விளைவாக சீனாவுடனான வர்த்தகம் வீழ்ச்சியடைந்துள்ளது. உணவு, உரம் மற்றும் எரிபொருளுக்காக வட கொரியா சீனாவை நம்பியுள்ளது. அணுசக்தி திட்டங்கள் காரணமாக விதிக்கப்பட்டுள்ள சர்வதேச தடைகளின் கீழ் வட கொரியாவும் போராடுகிறது.



## தமிழ்நாட்டில் உள்ள இலங்கை அகதிகளிற்கு இந்திய குடியுரிமையை வழங்கவேண்டும்

தமிழ்நாட்டில் உள்ள இலங்கை அகதிகளிற்கு இந்திய குடியுரிமையை வழங்கவேண்டும் என தமிழக முதல்வர் முக ஸ்டாலின் இந்திய பிரதமரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்திய பிரதமரை புதுடில்லியில் இன்று சந்தித்தவேளை ஸ்டாலின் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.



தமிழ்நாட்டில் உள்ள இலங்கை அகதிகளிற்கு இந்திய குடியுரிமையை வழங்கவேண்டும் குடியுரிமை திருத்தசட்டத்தை மீள பெறவேண்டும் என ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மீனவர் பிரச்சினைக்கு தீர்வை காணவேண்டும் கச்சதீவை மீட்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## இஸ்ரேலின் மீது தீமூட்டும் பலூன்களை ஏவியது ஹமாஸ்

ஹமாசின் பகுதியிலிருந்து தீ மூட்டும் பலூன்கள் செலுத்தப்பட்டதை தொடர்ந்து பதில் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது. காஸாவிலிருந்து அனுப்பப்பட்ட பல பலூன்கள் காரணமாக இஸ்ரேலின் பல பகுதிகளில் தீ பரவியது என இஸ்ரேலின் தீயணைப்பு படையினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை ஹாசாவில் உள்ள ஹமாஸின் இலக்கினை தாக்கியுள்ளதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது. கான் யூனிஸ் நகரத்தின் மீதும் தாக்குதலை மேற்கொண்டுள்ளதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது. காஸாவிலிருந்து தொடரும் பயங்கரவாத அச்சுறுத்தல்கள் காரணமாக மீண்டும் யுத்தம் உட்பட எதற்கும் தயார் என இஸ்ரேல் தெரிவித்துள்ளது. ஹமாசின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பகுதியிலிருந்து செலுத்தப்பட்ட தீப்பிடிக்கும் பலூன்கள் காரணமாக 20 இடங்களில் தீப்பிடித்தது என இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

## பிரான்ஸில் முகக்கவசம் அணிவது கட்டாயமில்லை!

பிரான்ஸில் ஒருசில இடங்கள் தவிர்த்து ஏனைய இடங்களில் முகக்கவசம் அணிவது கட்டாயமில்லை என பிரதமர் ஜீன் காஸ்டெக்ஸ் அறிவித்துள்ளார்.

இதன்படி அன்று (வியாழக்கிழமை) முதல் கட்டாய முகக்கவசம் என்ற கட்டுப்பாடு தளர்த்தப்படுகின்றது.

இதுதொடர்பாக பிரதமர் ஜீன் காஸ்டெக்ஸ் அன்று அமைச்சர்களுடனான சந்திப்பு நிறைவடைந்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,




'இரவு நேர கட்டுப்பாடு எதிர்வரும் ஜூன் 20ஆம் திகதியுடன் நிறைவுக்கு வருகின்றது. இனிமேல் முடக்கநிலை கட்டுப்பாடுகள் இல்லை. அதேவேளை, முகக்கவசம் அணிவதும் இனிமேல் கட்டாயமில்லை.

ஆனால், அதில் சில விதிவிலக்குகள் உண்டு. நெருக்கமான இடங்கள், நீண்ட வரிசையின் போது, அதிக மக்கள் கூட்டம் உள்ள இடங்கள் போன்ற இடங்களில் மாத்திரம் முகக்கவசம் அணியவேண்டும்' என கூறினார்.

ஜூன் 20ஆம் திகதி இசைத்திருவிழா இடம்பெற உள்ளதால், அன்றைய இரவில் இருந்து முடக்கநிலை கட்டுப்பாடுகள் முழுமையாக அகற்றப்படுகின்றது.

## அமெரிக்கா மற்றும் ரஷ்யாவின் தூதர்களை மீண்டும் பணியமர்த்த முடிவு!

அமெரிக்கா மற்றும் ரஷ்யாவிற்கிடையில் அணு ஆயுதங்களைக் குறைப்பது தொடர்பாக எஞ்சியுள்ள ஒப்பந்தம் குறித்து மீண்டும் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கவும், இருநாடுகளின் தூதர்களை மீண்டும் பணியமர்த்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. உலகின் சக்திவாய்ந்த இரு நாடுகளின் தலைவர்களான அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுக்கும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புடினுக்கும் இடையில் சுவிஸ்லாந்தின் ஜெனீவா நகரில் அன்று (புதன்கிழமை) நடைபெற்ற நேரடி பேச்சுவார்த்தையில், இந்த தீர்மானம் எட்டப்பட்டது.

இந்தப் பேச்சுவார்த்தை 4 மணித்தியாலங்கள் முதல் 5 மணித்தியாலங்கள் வரை நடை பெறும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், 3 மணித்தியாலங்களுக்குள் பேச்சுவார்த்தை நிறைவடைந்தது. இந்த பேச்சுவார்த்தையை தொடர்ந்து ஊடகங்களை சந்தித்த ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புடின், 'அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் என்னுடன் மனித உரிமை விவகாரங்கள் குறித்து உரையாடினார். ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸி நவால்னி குறித்தும் அவர் விவாதித்தார்.

அணு ஆயுதங்களை குறைப்பது தொடர்பாக அமெரிக்கா- ரஷ்யா இடையே எஞ்சியுள்ள ஒப்பந்தம் எதிர்வரும் 2026ஆம் ஆண்டுடன் நிறைவடைகிறது. அந்த ஒப்பந்தத்தில் மாற்றங்கள் செய்வது தொடர்பான பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க இருவரும் தீர்மானித்துள்ளோம். அமெரிக்காவில் இருந்து ரஷ்ய தூதரும், ரஷ்யாவில் இருந்து அமெரிக்க தூதரும் அவரவர் நாடுகளுக்கு திரும்ப அனுப்பப்பட்ட நிலையில், அவர்களை மீண்டும் பணியமர்த்துவதற்கும், இணையவழி பாதுகாப்பு ஆலோசனைகளை தொடங்கவும் இருவரும் ஒப்புக் கொண்டோம்.

இந்தப் பேச்சுவார்த்தை எந்த விரோதமும் இல்லாமல் ஆக்கபூர்வமாக அமைந்தது. எனினும் அமெரிக்காவுடனான உறவில் முன்னேற்றம் ஏற்படுமா என்பது தெரியவில்லை. ஆனால் பரஸ்பர நலன் குறித்த நம்பிக்கை தென்பட்டுள்ளது' என கூறினார்.

இதனைத்தொடர்ந்து கருத்து தெரிவித்த அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், 'எனது செயற்திட்டம் ரஷ்யாவுக்கு எதிரானது அல்ல எனவும், அமெரிக்க மக்களின் நலன் சார்ந்தது என்றும் புடினிடம் தெளிவுபடுத்தினேன். இருதரப்பு உறவுகள் மேம்படுவதற்கான வாய்ப்புகள் தென்படுகின்றன. புடினுடன் ஆயுதங்கள் கட்டுப்பாடு, இணையவழி தாக்குதல் குறித்தும் ஆலோசித்தேன். அவற்றுக்கான உட்கட்டமைப்புகள் விரிவுபடுத்தப்பட வேண்டும் என்றும் தெரிவித்தேன்' என கூறினார்.

இந்தப் பேச்சுவார்த்தையை தொடர்ந்து வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில், பதற்றமான தருணங்களிலும் இருதரப்புக்கும் பொதுவான இலக்குகளை எட்டுவதில் இருநாடுகளும் முன்னோக்கிச் செல்ல முடிந்ததை இந்தச் சந்திப்பு எடுத்துக்காட்டியதாக தெரிவிக்கப்பட்டது. ஜோ பைடன் ஜனாதிபதியாக பொறுப்பேற்ற பிறகு அவர் புடினை நேரடியாகச் சந்திப்பது இதுவே முதல்முறையாகும்.



# பழமை வாய்ந்த யாழ்ப்பாண கோட்டையின் அழகு!

இலங்கைத் தீவின் வடபகுதியின் தலைநகரமாய் இலங்கைத்தீவின் மகுடமாய் விளங்குவது முனையிலுள்ள யாழ்ப்பாணம் ஆகும்.

பல ஆலயங்கள், வரலாறுகள் மற்றும் தொன்மை வாய்ந்த பல சிறப்புக்களையும் தன்னகத்தே கொண்டு விளங்கும் யாழ்ப்பாணத்தின் தொன்மையினை எடுத்துக்காட்டுவதாக பல இடங்கள் அமைந்துள்ளது.

அந்த வகையில் மன்னராட்சி காலத்தில் யாழ் கோட்டையானது பிரசித்தி பெற்றது. அதன்பின்னர் உள்நாட்டு போரில் சிதைவடைந்தபோதும் எமது புராதனங்களை எடுத்துக்காட்டும் தொல்லியல் சான்றாக யாழ் கோட்டை அமைந்துள்ளது.

ஒல்லாந்தரால் இறுதிவடிவம் கொடுக்கப்பட்ட யாழ் கோட்டை நட்சத்திரவடிவில் அதன் அடித்தளத்தைக் கொண்டுள்ளது.

இக்கோட்டையின் தோற்றக்காலத்தை யாழ்ப்பாணத்தின் மீதான பராந்தகச்சோழனின் ஆட்சிக்காலத்துடன் இணைக்கப்படக் கூடியதாகவுள்ளது.

கோட்டை அமைந்துள்ள நிலப்பரப்பின் தோம்புப் பெயர் சோழவணிக கணமொன்றுக்குரியதாகப்படுவதிலிருந்து இக்கோட்டையரசனின் தோற்ற காலத்தினை கி.பி.11ம் நூற்றாண்டுக் காலத்துடன் கொள்ள முடியும்.

யாழ்ப்பாணக் கோட்டையின் இடிபாடுகளுக்குள்ளிலிருந்து ஏராளமான சோழர் காலத்திற்குரிய மட்பாண்டங்கள் சேகரிக்கப்பட்ட வகையிலிருந்து இக்கருத்தினை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

போர்த்துக்கேயருடைய யாழ்ப்பாண வருகையுடன் (கி.பி. 1619) சோழர் காலத்துக் களிமண் கோட்டை புதுப்பிக்கப் பெற்று ஒரு சிறிய வடிவத்தினைப் பெற்றுக் கொண்டது.


கோட்டையின் மையப்பகுதியில் காணப்படும் சிறிய கத்தோலிக்க தேவாலயம் (ஒ.எல்.ஆர்.சேர்ச்) போத்துக்கேயர் காலத்து யாழ்ப்பாணக் கோட்டையின் மையப்பகுதியாக விளங்கியது.

ஒல்லாந்தர் வசம் யாழ்ப்பாணம் கையளிக்கப்பட்டதுடன் (1696) யாழ்ப்பாணக் கோட்டை அகல்விக்கப்பட்டு நட்சத்திரவடிவினைப் பெற்றுக் கொண்டது.

யாழ்ப்பாணக் கோட்டை ஒரு தொல்லியல் கருவூலமாகும். தமிழ்க் கல்வெட்டுக்கள் பல அதன் புறச்சுவர்களில் மறைத்து வைத்துக் கட்டப்பட்டுள்ளன.

கோட்டைச் சுவர்களிலுள்ளே தொல்லியல் கருவூலங்கள் காணப்படுகின்றன. இதனை முழுமையான ஆய்விற்கு உட்படுத்தும் போது வரலாற்றுத் தகவல்கள் பல எமக்குக் கிடைக்கக்கூடிய வாய்ப்புள்ளது.

இன்றும் கூட யாழ்ப்பாணம் செல்லும் சுற்றுலா பயணிகள் யாழ் கோட்டையினை பார்க்காமல் திரும்புவது இல்லை.



இப்பத்திரிகை இலக்கம் 154A, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 20.06.2021 அன்று வெளியிடப்பட்டது.